1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "CATHOLIC PRESS", JAFFNA.
Telephone: No. 100.

சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

80-ம் புத்தகம் || யாழ்ப்பாணம் 1955-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 24-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 || 46-ம் இலக்கம்

காலநிலை

சென்றவெள்ளிக்கிழமைமுதல் இவ்விடம் மழைபெய்துவந்துஇரண்டொரு தினங்களாக ஓய்ந்திருந்தது. தங்கள் நெற்பயிர் வாடுகிறதேயென்று ஏங்கியிருந்த சமக்காரர் இந்த மழையாலே மனந்தேறினர். நேற்றுமுதல் மேலும் அதிகமான மழைக்கோலங் காணப்பட்டு இன்றுமுதல் மழைபெய்கின்றது.

யாழ்ப்பாண மின்சாரநிலையம்

யாழ்ப்பாணத்திலே பெரியஅளவில் மின்சாரநிலையத்தை அமைப்பதற்கென்று நிகழும்அரசிறைவருடத்திலே அரசாங்கம் அனுமதித்திருந்த பணம் இப்போது இருமடங்குக்குமேல் அதிகமாக்கப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணநகருக்கு மின்சாரம்உதவுதற்கென்று செலவிடப்படவிருக்கும் 45 லட்சம் ரூபாவில் முந்த 25 லட்சம் ரூபாவே செலவிடப்படும்.

நெல்லுக்குப்பதில் அரிசிக்கேள்வி

யாழ்ப்பாணத்திலே அரிசிக்கூப்பன்கள் வைத்திருப்போருக்கு இந்தமழைகாலம்முடிகிறவரையிலே நெல்லுக்குப்பதில் அரிசிவழங்கும்படியாக உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரியைக் கேட்டுக்கொள்ளும் பிரேரணைஒன்றை யாழ்ப்பாணநகரசபையின் அடுத்தகூட்டத்தில் தாம் கொண்டுவரப் போவதாக அச்சபைஅங்கத்தவரான திரு. எ. நடராசா அவர்கள் ஓர் முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறரென அறிகின்றோம்.

இலவச மதியப்போசனம்

பாடசாலைப்பிள்ளைகளுக்கு மத்தியான இலவசப்போசனம் அளிக்கும்திட்டம் மீண்டும்நடைமுறைக்கு வரவிருக்கிறது. இலங்கையிலுள்ள எல்லாப் பாடசாலைகளும் பயன் பெறக்கூடிய வகையிலே உள்நாட்டுமந்திரியாரான திரு. ஏ. இரத்நாயகா அவர்கள் ஓர்திட்டத்தை வகுத்திருக்கின்றார். இம்முறை பாடசாலைப்பிள்ளைகளுக்கு மத்தியானப்போசனமாகப்பாலும்பாணும் கொடுபடும்போல்இருக்கிறது. முன்னர் பாணும்கறியும் கொடுபட்டுவந்தன. நோமைகாரிலே சமீபத்தில்நடந்தேறிய உலக உணவு-கமத்தொழில் ஸ்தாபனமகாநாட்டின்பயனாக வெளிநாடுகளிலிருந்து கிடைக்கவிருக்கும் உணவுதன்கொடைகள்மூலமே இந்த இலவசமதியப்போசனம் அளிக்குந்திட்டம் மீளவும்நடைமுறைக்கு வரவிருக்கின்றது.

ஆஸ்பத்திரிச் சுவீப்புகள்

ஆஸ்பத்திரிச் சுவீப்புகள்மூலம் அரசாங்க ஆஸ்பத்திரிகள் நிதிக்கு இதுவரை ஏழுலட்சம்ரூபா சேர்ந்திருக்கிறது. ஆஸ்பத்திரிகளின் அபிவிர்த்தி வேலைகளுக்கே இத்தப்பணஞ் செலவிடப்படும். ஆனால், ஏறக்குறையப் பத்துலட்சம்ரூபா சேர்ந்தபின்னரே இந்த வேலைகளை ஆரம்பிப்பதென அதிகாரிகள் முடிவுகட்டியிருக்கிறார்கள். மாகாணஆஸ்பத்திரிகளே முதன்முதலாகக் கவனிக்கப்படும். இதுவிஷயமாய்ச் சுகாதாரமந்திரியாரின் பாராளுமன்றக் காரியதரிசியான திரு. சிறில் அற்றிகலஅவர்கள் பலவிடங்களிலுமுள்ள ஆஸ்பத்திரிகளைப் பார்வையிடத் தொடங்கியிருக்கிறார்.

விளம்பர எச்சரிக்கை

சட்டவிரோதமாக இலங்கையில் காலவைக்கும் கள்ளக்குடியேற்றகாரருக்குத் தஞ்சம்அளிப்பவர்களுக்குக் கடுமையானதண்டனை விதிக்கப்படுமென்று பொதுமக்களை எச்சரிக்கும் நூற்றுக்கணக்கான சுவரொட்டிவிளம்பரங்கள் பேசாலை, தலைமன்னார் முதலாமிடங்களில் ஒட்டப்பட்டிருக்கின்றன. சட்டவிரோதமாக இலங்கைக்கரையில் இறங்குகிறவர்களுக்கு உதவிசெய்கிறவர்கள், அதற்குஉடந்தையாயிருக்கிறவர்கள், அவர்களை வேறிடத்துக்குக் கடத்திச்செல்ல எத்தனிக்கிறவர்கள், தரகர்கள்முதலியோருக்குத் தலைக்கு ஐயாயிரம்ரூபாவுக்குக் குறையாத அபராதமோ, அன்றேல் ஐந்துவருடத்துக்குக் குறையாத சிறைத்தண்டனையோ விதிக்கப்படுமென இந்தச்சுவரொட்டிவிளம்பரமூலம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆங்கிலபாஷையின் அவசியம்

"ஆங்கிலம் ஓர்சர்வதேசபாஷையாகும்; அஃது இறந்துபடவிடப்படின் ஓர்பெரும் ஆபத்தாகமுடியும்; ஆங்கிலம் அலட்சியஞ்செய்யப்படாதிருக்கவேண்டும்; அதனை ஓர்குடியேற்றநாட்டுக் குரியதென்றோ, அன்றேல் ஆங்கிலசாகியத்தினருக்கு மாத்திரம் கட்டுப்பட்டதென்றோ எவரும்நினைக்கப்படாது; அது ஓர்சர்வதேசபாஷையாகக் கொள்ளப்படவேண்டும்; பாஷைப் பிரச்சினை என்பது அநேகநாடுகளுக்குச் சாதாரணமானதாகும்; ஒவ்வோர் நாடும் தனதுசொந்தமக்களின் பாஷையைக் கொண்டிருக்கஆசிப்பது சாமானியமும், இயற்கையுமாகும்" என்று கிறிஸ்தியன்பிறதர்மார்களின் உதவி அதிசிரேஷ்டரான அதிசங். லோறன்ஸ் ஓ' ரூல் பிறதர் அவர்கள் சென்றவெள்ளிக்கிழமை கிலாப்பட்டினத்திலுள்ள அர்ச். மரியாயகிகல்லூரிப் பரிசளிப்புவிழாவிற்குத் தலைமைவகித்துப்பேசியபோது குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்தியவர்த்தக ஸ்தாபனங்கள்

காலஎல்லை முடிவடைந்த தற்காலிக வாசப் பெர்மிற்றுகளைப் புதுப்பிக்கும் விஷயமாய் அரசாங்கம் கடுமையாயிருந்து வருவதன் காரணமாகக் கொழும்பிலே புறக்கோட்டையில் நெடுங்காலமாக வியாபாரஞ் செய்துவந்த சுமார் பன்னிரு பிரபலஇந்திய வர்த்தக ஸ்தாபனங்கள் மூடப்பட்டுவிட்டதாகவும், இன்னும்பல ஸ்தாபனங்கள் மூடிவிடத் தயாராகிக்கொண்டிருப்பதாகவும் இந்தியவர்த்தக சங்க அதிகாரிஒருவர் தெரிவித்திருக்கின்றார். கொழும்பிலே மட்டுமன்றிப் பிறவூர்களிலும் இதேநிலைமை காணப்படுகின்றதாம்.

ஒலிபெருக்கிகளின் தொல்லை

யாழ்ப்பாணத்திலே ஒலிபெருக்கிகளினால் ஏற்படுந்தொல்லைகளோ இம்மட்டன்று. அதனால், அவற்றின்தொல்லைகளைத் தடுத்துவைக்குமாறு பொலிசார் தீவிரமாகமுயன்று வேலைசெய்து வருகின்றனர். யாழ்ப்பாணப் பொலிசைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர்மார் நகர்முழுவதிலுஞ்சென்று ரேடியோக்களையும், ஒலிபெருக்கிகளையும் பாவித்துவருகிறவர்களின் பெயர்அட்டவணை ஒன்றைத் தயாரித்தும், அவற்றைமுறைகேடாகப் பாவனைசெய்யப்படாதென எச்சரித்தும் வருகின்றார்கள். பொதுமக்கள் மாத்திரமல்ல, யாழ்ப்பாண அரசினர் பெரியஆஸ்பத்திரியிலுள்ள நோயாளிகளும் இத்தொல்லைகளைத் தாங்கவாற்றாது முறையீடுசெய்து வந்திருக்கிறார்கள்.

தநப்பட்டாபிஷேகம்

கொழும்பிலே கொட்டாஞ்சேனையில்வசிப்பவர்களான திரு. பி. ஞானப்பிரகாசம் தம்பதிகளின் சிரேஷ்டபுதல்வரும், டக்டர் ஜே. பி. ஞானப்பிரகாசம் அவர்களினதும், பொறளையிலே அப்போஸ்தலிக்க கார்மேல்சபைக் கன்னியாஸ்திரீயாய் இருந்துவருகின்ற சங். சிஸ்டர் அன்னபெலி அவர்களினதும் சகோதரரும், யேசுசபையைச் சேர்ந்தவருமான வண. வின்சென்ற் டி போல் ஞானப்பிரகாசம் பிறதர் அவர்கள் இம்மாதம் 21-ந் திகதியாகிய சென்றதிங்கட்கிழமை வடஇந்தியாவிலே கேர்சியோங் எனுமிடத்திலே குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்றிருக்கின்றார். புதியகுருவர் மறுநாள் அங்குதானே தமதுமுதற்திவ்விய பூசைப்பலியை நிறைவேற்றினார். இவர் கொழும்பு, சஞ்சூசையப்பர் கல்லூரிப் பழையமாணவர். இலங்கைக்குத் திரும்பியதும் திரிகோணமலை மேற்றிராசனத்திலே திருத்தொண்டாற்றிவருவார். இவருடைய தந்தையார் காலிக்கச்சேரியிலே அரசாங்க உபதேசியாயிருந்து இளைப்பாறியவர்.

நெடுந்தீவில் முதல்வன்

நெடுந்தீவிலே முதன்முதலாகச் சென்ற 12-ந்திகதியன்று திரு. ஆர். டி. நாகலிங்கம் என்பவரால் ஓர்வான் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டிருக்கிறது. மாட்டுவண்டிகளிலிடஅத்தீவுமக்களுக்குக் கிடைத்திருக்கும் ஒரேயொரு மோட்டர்ரதம் இதுவேயாகும். இது ஜெற்றியிலிருந்து உள்ளூருக்கும், உள்ளூரிலிருந்து ஜெற்றிக்கும் பிரயாணிகளைஏற்றிச்செல்லும். பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை ஏற்றிக்கொண்டுசெல்லவும் கூடியதாயிருக்கிறது. இன்னும் நெடுந்தீவைச் சுற்றிப்பார்க்கவென்று அடிக்கடிசெல்லும் தரிசகர்களுக்கும் இதுவெகுவாகப் பயன்படக்கூடியதாகும்.

இருபெரிய பரிசில்கள்

அடுத்தவருடம் நிகழவிருக்கின்ற நேரியல் உணவு-கமத்தொழிற் பொருட்காட்சி சம்பந்தமாய் இருபெரியபரிசில்களைப்பெறும் ஒரேயொரு இலங்கைக் கமக்காரரென்ற பெருமையைக் கிளி கொச்சிக் கிராமச்சங்கத்தலைவர் திரு. அன்ன சி. பொன்னம்பலம்அவர்கள் ஈட்டியிருக்கின்றார். யாழ்ப்பாணப் பெரும்பிரிவிலே மிகச்சிறந்த விதைநெல்லை உற்பத்திசெய்த கமக்காருக்குரிய தங்கப்பதக்கத்தையும், யாழ்ப்பாணப் பெரும்பிரிவிலே மிகச்சிறந்த நெற்செய்கைக்குரிய மற்றோர் பரிசிலையும் இவர் பெற்றிருக்கின்றார். திரு. அன்ன சி. பொன்னம்பலம்அவர்கள் கிளி கொச்சிக் கிராமச்சங்கத்தலைவர்மாத்திரமல்ல, ஓர்சமாதான நீதவானும், மாங்குளக் கூட்டுறவுக் கமவினைபொருள் உற்பத்தி-விற்பனவுச்சங்கத்தலைவரும், மத்தியபெரும்பிரிவுக் கமத்தொழிற் கம்மிற்றி அங்கத்தவருமாவர்.

மாருதப்புரவியின் மர்மம்

பண்ணைக்கடற் பாதையிலே பிரயாணசேவைக்கென்று பல்லாயிரக்கணக்கானரூபாசெலவில் வாங்கிக்கொண்டுவரப்பட்ட 'மாருதப்புரவி' என்னும் மோட்டர்ப்படகு இங்குவந்தகாலந்தொடக்கம் அடிக்கடி பழுதடைந்துகொண்டே வருகிறது. இவ்விதம் அது பழுதடைந்துவருவதில் ஏதோமர்மம் இருக்கவேண்டுமென்றும், அரசாங்கம்இதுபற்றி விசாரணைசெய்து பண்ணைக்கடற்பிரயாணசேவை திருப்திகரமாக நடைபெறுதற்கான ஒழுங்குசெய்ய வேண்டுமென்றும் பொதுமக்கள் பேசிக்கொள்ளுகிறார்கள். மாருதப்புரவி பழுதடைந்துகிடப்பதினால் இப்பொழுதுபடகுப்போக்குவரத்தே நடைபெற்றுவருவதாகவும், அதனால் மோட்டர்ரதங்களும், பிறவும் இழுவைப்பாதைமூலமாகவே ஏற்றிச்செல்லப்படுவதாகவும், அதனால் வீண்காலதாமதம் ஏற்படுவதாகவும் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தரிக்கிற ஸ்தலம் என்றால் என்ன?

(சி. எஸ். நாயகம், ஸ்றேஷன்மாஸ்டர், கெம்பாஸ்—மலாயா)

(முன்தொடர்ச்சி)

ஓர்தனவந்தனிடம் ஒருவன் 500 தங்கப்பவுண் கடன்பட்டானென வைத்துக்கொள்வோம். பிறகு பட்டகடனைத் திரும்பச் செல்லக்கட்டவேண்டிய காலம்வந்தபோது, அந்தத்தனவந்தன் தனதுகடன்காரன்மீது கருணைகொண்டு அவனைநோக்கி: "நீ 500 தங்கப்பவுணுக்குப்பதில் 500 செம்புச்சல்லிகட்டினால் உன்னைமன்னித்துவிடுகிறேன்" என்பானுகில் அந்தக்கடன்காரன் தனதுபேருபகாரியான அந்தத்தனவந்தனை எவ்வளவாக வந்திப்பான்; எவ்வளவாகநேசித்து நன்றிபாராட்டுவானென்று சொல்லவும்வேண்டுமா? ஓர்கால் அவனுக்குத் தான் அடிமையென்று சொல்லத்தானும் பின்னிற்கமாட்டான். இவ்விதமே சர்வேசுரனுக்கு நாம் செல்லக்கட்டவேண்டிய பாவக்கடன் தங்கராணயங்களிலாகும். (இது உத்தரிக்கிறஸ்தல வேதனையைக் குறிக்கும்.) ஆனால், அவர் தமது இரக்கப்பெருக்கத்தினால் நாம் அவ்விதம் உத்தரிக்கிறஸ்தலத்தில் கிடந்து தங்கப்பவுண கணக்கிலே நமது பாவக்கடனைத்தீராமல், சல்லிக்கணக்கிலே இவ்வுலகில் தீர்க்கும்பொருட்டே துன்பஉபத்திரவங்களே — சிலுவைகளே நமக்குஅனுப்புகிறார். இந்தகன்மைத்தனத்திற்காக நாம் எவ்வளவோ அவரைநேசித்து, அவருக்குக்கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம். இதற்குப்பதில் இந்தப் பரமஇரகசியத்தை அறியாத எத்தனையோபேர் சிலுவைகள்வரும்போது "கடவுளுக்குக் கண்ணில்லையா? நீதியில்லையா? கருணையில்லையா?" என்று பலவாறு அவரை நிந்திக்கிறார்கள். இவர்கள் உத்தரிக்கிறஸ்தலத்திற்கு ஓர்கால் போனுற்தான் சிலுவைகளின் நன்மையைச் சரிவரக் கண்டுணர்வார்கள். பின்வரும் சம்பவம் இதற்குச்சான்று.

ஓர்சந்நியாசியார் பலவருடகாலமாகப் பாயும்படுக்கையுமாய்க் கிடந்து அழுந்தினார். சீவியமே அவருக்குச் 'சீ'யென்று போய்விட்டது. மரணமே தாவினையென்று அதற்காக ஆண்டவரைநோக்கி மன்றாடிக்கொண்டுவந்தார். சர்வேசுரனும் அவரின்மன்றாட்டுக்குச் செவிசாய்த்து, அவருடைய காவற்சம்மனசை அவரிடம்அனுப்பி, "நீ இன்னும் ஐந்துவருடம் கிடந்து இவ்விதம்அழுந்தவேண்டும்; இவ்விதம் உன்பாவக்கடன் தீர்ந்ததும் நீ மரணித்து நேரே மோட்சம்சேருவாய்; இது விருப்பமில்லாவிடின் இப்பொழுதே நீ இறந்து உனதுஆத்துமம் உத்தரிக்கிறஸ்தலஞ்சென்று ஒருநாள்மாத்திரமே அங்கிருந்து உத்தரிப்புக்கடனைத் தீர்த்ததும மோட்சம்போய்ச் சேருவாய்; உனதுஇஷ்டம்போல் ஒன்றைத் தெரிந்துகொள்ளலாம்" என்று தெரிவிக்கும்படிசெய்தார்.

இதைக்கேட்ட சந்நியாசியார், "ஐந்துவருடம்எங்கே? நான்எங்கே? இவ்விதம் ஐந்துவருடகாலங் கிடந்து உத்தரிக்க யாரால்முடியும்? என்னால் முடியாது; அதற்குப்பதில் ஒருநாள் உத்தரிப்பது எவ்வளவோ இலகுவாகும்; ஆதலால், என்கல்லசம்மனசானவரே! இப்போதேநான் இறந்து, உத்தரிக்கிறஸ்தலஞ்சென்று அங்கே ஒருநாள்மட்டும் உத்தரித்துவிட்டு மோட்சம் போவதையே தெரிந்துகொள்ளுகிறேன்" என்றார். அப்போதே அவருடையசீவன் உடலைவிட்டுப்பிரிய, அவராதுஆத்துமம் உத்தரிக்கிறஸ்தலஞ் சென்றது. பின்னர் சிறிதுவேளைகழிந்ததும் அவருடையஆத்துமம் அங்குவந்த தனதுகாவல்சம்மனசைநோக்கி: "என்கல்ல சம்மனசானவரே! நீர் பெரும்பொய்சொல்லி என்னைஏமாற்றிவிட்டீரே; இவ்விதம்நீர் வகைமோசஞ் செய்வீரென்று கனவிலும் நான்கருதவில்லையே" என்று தன்னுடையஉபத்திரவம் தாங்கமாட்டாமல் சொல்லியது.

அப்பொழுது காவற்சம்மனசானவர் அறிந்தும்அறியாதவர்போல், "ஏன்? என்னகாரியம்?" என்று வினவினர். அதற்கு ஆத்துமம் அவரைநோக்கி: "ஒருநாளிலே உத்தரிப்புக்கடன்நீங்கி நான் மோட்சம்போய்ச் சேருவேனென்றுசொன்னீரே; உமதுபேச்சை நம்பியே நான் இவ்விடம்வந்தேன்; இப்போதுதான் இங்குவந்து எத்தனையோ வருடங்களாகிவிட்டனவே; இன்னும்முடிவைக் காணவில்லையே!" என்று பெரிதும்வியாகுலத்துடன் கூறியது. இதைக்கேட்டசம்மனசானவர் சந்நியாசியாரின் ஆத்துமத்தைநோக்கி: "எனதுஅரியகண்பனே! உன்னைநான் ஏமாற்றவில்லை; உனக்குப் பொய் சொல்லவில்லை; உனக்குஇது ஒருயுகம் போலத் தோற்றலாம்; ஆனால், இப்பொழுதுதான் உனது சட்டத்தைக் குளிப்பாட்டிக் கட்டிலில்வளர்த்திச் சூழவிருந்து இளைப்பாற்றிச் செபம் சொல்ல உனதுசகோதரசந்நியாசிகள் ஆயத்தப்படுகிறார்கள்; உனது பிரேத அடக்கத்திற்கு இன்னும்எவ்வளவோ நேரம் இருக்கிறதே" என்றார். இவ்விதம் சொல்லக்கேட்டதும் அந்தஆத்துமம் துடித்துப்பதைத்துத் தன்காவல் சம்மனசைப் பார்த்து: "அப்படியானால், எனதுஅரிய சம்மனசானவரே! போதும், போதும்; வேண்டாம், வேண்டாம்; இந்தநிமிஷமே என்னைக் கொண்டுபோய்த் திரும்பவும் பூலோகத்தில் விட்டுவிடும்; ஐந்துவருடமல்ல, ஆயிரம்வருடம் வேண்டுமானாலும் பூலோகத்தில் கிடந்துஅழுந்தி உத்தரிக்கத் தயாராயிருக்கிறேன்" என்றதும், ஆண்டவரின் உத்தரவுப்படி அந்தஆத்துமம் தனதுசரீரத்தில்புகுந்தது. சந்நியாசியார் உயிர்பெற்றுக் கண்திறந்ததைக்கண்டு சூழநின்ற சந்நியாசிகள் திகைத்தமலைத்து மிகுந்ததிகிலடைந்தனர். அதன்பின்அவர் ஐந்துவருடகாலம் எல்லாத் துன்பஉபத்திரவங்களையும் நல்லமனதோடு அனுபவித்தபின் இறந்துபோகவே, அவருடையஆத்துமம் நேரே பரலோகசம்பாவனைக்குப் பறந்துபோயிற்று. ஆகவே, இச்சிறு சம்பவம் துன்பஉபத்திரவங்களில் — பாடுபீடைகளில்—கஷ்டநஷ்டங்களில் முறைப்படும் பழக்கமுள்ள நம்மெல்லோர்க்கும் ஓர்தகுந்தபாடமாய் இருப்பதாக! இதிலேநாம் நட்பமாய்க் கவனிக்கவேண்டிய ஓர்விசேஷம்யாதெனில், மறுமைச்சீவியத்தில் "ஒருநாள் ஆயிரம்வருடம்போலும், ஆயிரம்வருடம் ஒருநாள்போலுமிருக்கும்" (2 இரா. 3:8) என்னும் வேதவாக்கியம் சரிவரஇருப்பதைக் காண்பதேயாகும்.

(தொடரும்)

நான்கு வல்லரசுகளின் மகாநாடு

ஜெனிவாவிலே நடைபெற்ற நால்வர்மகாநாடு படுதோல்வியில் முடிந்தது. சுமார் மூன்றுவாரகாலம்நான்கு வல்லரசுகளின் பிரதிநிதிகளும் அங்குகூடி ஜேர்மனியின்ஐக்கியம், ஐரோப்பிய பாதுகாப்பு, ஆயுதப்பரிகரணம் போன்ற முக்கியத்துவம்வாய்ந்த பல விவகாரங்கள்பற்றிச் சம்பாஷணை நடத்த முற்பட்டார்கள். ஆனால், ஜேர்மனியின் ஐக்கியம்பற்றிய சமபாஷணைநிலையிலேயே பேச்சுவார்த்தைகள் இறுகிவிட்டன. உடன்பாடு ஒன்றும்ஏற்படாமல் அந்தவிஷயத்தையே மூட்டைகட்டிவிட்டார்கள். "முதற்கோணல் முற்றிலும்கோணல்" என்றகதையில்தான் விஷயம் முடிந்துவிட்டது.

* * *

சிலகாலமாக ரூஷியா வெகுசாதுரியமாக இராசதந்திரங்கள் சிலவற்றைக் கையாண்டுவந்தது. சமாதானம், ஆயுதப்பரிகரணம்என்று வெறுமனே பேசுவதோடு நின்றுவிடாமல் காரியத்திலும் வக்கிரசுபாவத்தைக் கைகெகிழ்ந்து, விட்டுக்கொடுக்கும்கொள்கையை அனுஷ்டித்துவந்தது. ஆனால், ஜெனிவாமகாநாட்டில் எல்லாம் வெட்டவெளிச்சமாகிவிட்டது. ரூஷியாவின் இராசதந்திரம் தோற்றுவிட்டது. மகாநாட்டின்தோல்விக்கும் ரூஷியாதான்காரணமென்று மற்றவல்லரசுகள்சொல்லுகின்றன. ஜேர்மனியின்ஐக்கியவிவகாரத்தில் சோவியற்ரூஷியா விடாப்பிடியாக நில்லாதிருந்தால், சம்பாஷணைகள் வெற்றிபெறுமல் போனலும் மகாநாடு படுதோல்வியில் முடிந்திருக்காதுஎன்பது மற்றவல்லரசுகளின் அபிப்பிராயம்.

* * *

ஆனால், ஐரோப்பிய பாதுகாப்புப் பற்றியோ, ஜேர்மனியின் ஐக்கியம்பற்றியோ முதலில்பேசுவதுஎன்ற ஒரு சிறுபிரச்சினைமீது ரூஷியாவைப் போலவே மற்றவல்லரசுகளும்விட்டுக் கொடுக்காமல்நடந்து நிலைகுமைர்குலையக் காரணமாக இருந்திருக்கின்றன. ஜேர்மனியின்ஐக்கியம், ஐரோப்பிய பாதுகாப்பு, ஆயுதபரிகரணம், கிழக்கு-மேற்கு உறவுவளர்ச்சி ஆகியனபற்றித் தொடர்ந்து சம்பாஷணைகளை நடத்துவதற்கு எவ்விதமுட்டுக்கட்டையும் இல்லைஎன்பதாகமகாநாட்டுமுடிவில்வல்லரசுகளின்பிரதிநிதிகள் வெளியிட்ட அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார்கள். நேரடியாகக் கதவைஅடித்துச் சாத்தாமல் இந்தஅளவிலாவது தொடர்ந்து பிரச்சினைகளைத் தீர்க்க முயலுவதற்கான சூழ்நிலைஅமைந்ததே யென்று சமாதானப்பிரியர் திருப்தியடைய வேண்டியதுதான். வேறு வழியில்லை.

* * *

நம்பிக்கையோடுகூடிய வல்லரசுகளின்மகாநாடு அவநம்பிக்கையுடன் முடிவடைந்தவிட்டது. ஜெனிவாமகாநாட்டின் விஷயஅட்டவணையில் குறிப்பிடப்பட்டிருந்த விஷயங்கள்ஒன்றிலேனும் மேற்குவல்லரசுகளுக்கும், சோவியற்ரூஷியாவுக்குமிடையே எவ்விதஉடன்பாடும் ஏற்படமுடியாது போயிற்று. ஜேர்மனியின்ஐக்கியம், ஐரோப்பியபாதுகாப்பு, இருபுத்திரை நீக்கம், ஆயுதபரிகரணம்முதலிய சகல பிரச்சினைகளையும் ஜெனிவாமகாநாடு சிதறடித்துவிட்டது. இம்மகாநாடு உலகசமாதான இலட்சியத்தைநோக்கி மேலும்கொஞ்சதூரம் நடத்திச் செல்லுமென்று சமாதானப்பிரியர் கொண்டிருந்தநம்பிக்கை தவிடுபொடியாகிவிட்டது. இதுகாரணமாக உலகை இருகூறுகப் பிளவுபடுத்திவைத்திருக்கும் இருவல்லரசுக்கட்சிகளுக்கிடையே "கெடுபிடி யுத்தம்" மேலும தலைவிரிதாடுமோஎன்று உலகசமாதானவாதிகள் அஞ்சத் தேவையில்லை. ஏனெனில், இருகட்சியினரும் தத்தம்குழாங்களுக்குள்ளே சமாளிக்கவேண்டிய நிலைமைகளும், பிரச்சினைகளும் பலவிருக்கின்றன.

* * *

கம்யூனிஸ்தர்களின் உலக ஆதிக்கநோக்கத்தைச் சிதறடிக்குமுகமாக ஐக்கியஅமெரிக்கதேசம் உலகின் பல பகுதிகளிலும் கூட்டு ஒப்பந்தங்கள் செய்துகொண்டு கோஷ்டிப்பலத்தைத் திரட்டிவருவதை யாவருமறிவர். அதைஎதிர்த்துச் சோவியற்ரூஷியாதனது இராசதந்திர பாணங்களைத் தொடுத்துவருவதையும் யாவருமறிவர். ஜெனிவாமகாநாட்டின்மூலம் ஐக்கிய ஜேர்மனியைச் சிருட்டித்து அதை "நேற்றோ" வில் சேர்ப்பதன்மூலம் "நேற்றோ" ஒப்பந்தக்கோஷ்டியைப் பலப்படுத்தலாமென்று கருதிய மேற்கு வல்லரசுகளின் எண்ணம்ஈடேறவில்லை. மத்தியகிழக்குநாடுகளை "மேற்றோ" ஒப்பந்தத்தினகீழ் கொண்டுவர அவைகள்புரிந்துவரும் முயற்சிகளும் இன்னும் முற்றுக உருவாகவில்லை. வல்லரசுகளின்மகாநாடு தோல்வியுற்றதையடுத்து அமெரிக்கா "சீற்றோ" ஒப்பந்தநாடுகளை ஒன்றுதிரட்டிச் "சீற்றோ" வைப்பலப்படுத்த முயற்சிஎடுக்கலாம்.

இச்சந்தர்ப்பத்திலே கம்யூனிஸ்தஉலகஆதிக்கஇலட்சியம் கைகூடாதென்பதைச் சோவியற்ரூஷியா உணர்ந்திருக்கிறது. ஆகவே, இராசதந்திரமுறையில் அது "நேற்றோ", "மேற்றோ", "சீற்றோ" ஆகிய குழுக்களின்பலத்தைத் தகர்க்க உத்தேசித்துள்ளது. ரூஷியா உலகமகாநாடுகளிலும், வெளிநாடுகளுடனும் மேற்கொள்ளும் இராசதந்திர நடவடிக்கைகளைக் கவனிக்குமிடத்து இவ்வுண்மை புலனாகும்.

ஐக்கியஜேர்மனி உருவாகி 'நேற்றோ' வுடன்சேர்ந்து 'நேற்றோ' பலமுறுவதை ஜெனிவாமகாநாட்டின் மூலம் ரூஷியா தடுத்துவிட்டது. மத்திய-கிழக்குநாடுகள் "மேற்றோ"வில் ஐக்கியமுறுவதைக்குலைக்க ரூஷியா அப்பகுதியில் இராசதந்திரபாணங்களை எய்துவருகிறது.

விருத்தாப்பிய வயதுப் பெண்ஷன்பணம் பெறுகிறவர்களாய் உலகில் மிகப்பெருந்தொகையானோரைக் கொண்டுள்ளநாடு பிரித்தானியதேசமே. அங்கு இந்தப்பென்ஷன்பணம் பெறுகிறவர்களாய் ஏறக்குறைய 42,13,000 பேர் இருந்துவருகிறார்கள். இத்தொகை அத்தேசகுடிசனத்திலே நூற்றுக்கு 8·3விகிதமாகும். உலகின் வேறெந்த நாட்டிலாவது இவ்வளவு பெருந்தொகையானோர் விருத்தாப்பிய பென்ஷன்பணம் பெறுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாப்பரசரும் கொங்கோ அரசரும்

ஆபிரிக்காவிலே உருண்டி இராச்சியத்தின் 2-வது சார்ள்ஸ் மற்ஸா அரசரும், அவர் தேவியாரான ரேசலியா அரசியும் சமீபத்திலே ரோமாபுரிசென்று பரிசுத்தபாப்பரசரின் அந்தரங்க பேட்டிபெறலாயினர். பெல்ஜிய கொங்கோவிலே தங்கள் இராச்சியத்தைக் கொண்டுள்ள அரசரும், அரசியுமாகிய இருவருமே பக்திவைராக்கியமுடைய சிறந்த கத்தோலிக்கராவர். ஏறக்குறைய ஏழுஅடி உயரமுடையவரான அரசர் பரிசுத்தபிதாவுக்கு வெண்மையான இறகுகளினாலாய ஓர்தலைச் சீராவையும், தமதுபிரசைகள் மத்தியிலே இராசத்துவத்தின் ஓர் விசேஷ சின்னமாகத்திகழும் முத்துமாலையொன்றையும் அனபளிப்புச்செய்தார். பேட்டி முடிந்து இருவரும் வெளிகொண்டபின், "இது நம்முடையவாஞ்ஞாவின் மகாமனவருட்சிக்குரியதினம்" என்று அரசர் கூறிக்கொண்டார்.

வெஸ்ற்மினிஸ்ரர் ஆசனக்கோவில்

லண்டன்நகரிலுள்ள வெஸ்ற்மினிஸ்ரர் ஆசனக்கோவில் இன்னுமேகுறைவேலையாய் இருந்துவருகின்றது. அதனால் அதனைக் கட்டிமுடிப்பதற்கென்று தலைக்குஐந்துசிலின் கொடுத்துதவுமாறு கருதிஞல்கிறிவ்வின் ஆண்டவரும், நோர்போக்கின் டியூக்கோமகனுமாகிய இருவருஞ்சேர்ந்து கத்தோலிக்கரும், கத்தோலிக்கர் அல்லாதோருமான பத்துலட்சம்பேருக்கு மனுப்பண்ணியிருக்கின்ரூர்கள். இற்றைக்கு அறுபதுவருடங்களின்முன் தொடக்கப்பட்ட இந்தஆசனக்கோவிலைக் கட்டிமுடிக்க இன்னும்தேவைப்படும் பணம் 2 லட்சத்து 50 ஆயிரம் பவுண். ஒவ்வோர்பத்துப்பேரிடமிருந்து தலைக்கு ஒருசிறவுண் சேர்த்துக் கொடுக்கிறவர்கள் "வெஸ்ற்மினிஸ்ரர் ஆசனக்கோவில் நண்பர்கள்" என அறியப்படுவார்கள். இந்தஆசனக்கோவிலுக்கு அத்திவாரமிடப்பெற்ற அறுபதாம்வருட வைரயூபிலிவிழா இவ்வருடத்திலேயாகும்.

பிரான்சியபிரதமரின் வேண்டுகோள்

தற்போது பிரான்சியபிரதமராய் இருந்துவருகிறவரான எம். எத்கார் போர்அவர்களின் சொந்தநகரம் போட்லெஸ்னே என்பது. இது சுவிற்சர்லாந்தின் எல்லையையடுத்து உள்ளதாகும். பிரதமர்தான் இந்தநகரின்மேயர். அங்குள்ள விசாரணைப்பங்குக்கோவிலிலே புதியமணி ஒன்று சமீபத்தில் அப்பகுதி மேற்றிராணியாரால் ஆசீர்வதிக்கப்பட்டபோது, பிரதமர் பரீஸ் நகரிலிருந்து 350 மைல்தூரம பிரயாணஞ்செய்து அத்திருச்சடங்குக்குச் சமுகமளித்திருந்தார். அப்போது அவர் தமக்காகவும், பிரான்சிய அரசாங்கத்துக்காகவும் மன்ரூடிக்கொள்ளுமாறுமேற்றிராணியாண்டவரைக் கேட்டுக்கொண்டார்.

கலாநிதியின் குருபதவி

அயர்லாந்திலே கோக்நகர சர்வகலாசாலைக் கல்லூரியின் அதிபராக விளங்கியிருந்தவரும், அந்நாட்டின் கீர்த்திவாய்ந்த கலாநிதிகளில் ஒருவருமான பேராசிரியர் அல்பிறெட் ஓ'ரூஹில்லி அவர்கள் சமீபத்திலே குருத்துவாபிஷேகஞ் செய்யப்படவிருக்கின்ரூர். 70 வயதுடையவரான இப்பேராசிரியர் தற்போது டபிளின்நகரிலுள்ள பிளாய்க்ரோக்கல்லூரியிலே திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின் சபைக்குருமாருடன் சஞ்சரித்துவருகின்ரூர். எம்.ஏ., பி.எச்டி., எம். எஸ்சி. முதலாம் பண்டிதபட்டங்கள் பெற்றுள்ளவரான இவர் புதியஏற்பாடுசம்பந்தமாய் மிகஅருமையான பலநூல்களை எழுதியிருக்கின்ரூர். ஐரிஷ்சுதந்திரயுத்தத்தின்போது இவர் பிரித்தானிய அரசாங்கத்தால் கைதுசெய்து சிறைவைக்கப்பட்டிருந்தார். இளமையிலேஇவர் அநேகவருடகாலம் குருத்துவத்திற்குப் படித்துவந்தாராதலின் தற்போதுஇவருடைய குருத்துவ கல்வியின்காலம் குறைக்கப்பட்டுள்ளது.

சதாசகாயமாதா தபால்முத்திரை

ரோமாபுரியிலே இரட்சகர் சபைக் குருமாருக்குரிய அர்ச். அல்போனசலின் கோவிலிலே தற்போது இருந்துவருகின்ற "சதாசகாயமாதா" வின் 17×21 அங்குலப் பிரமாணமுள்ள அழகான திருவுருவப்படத்தைக்காட்டிலும் அதிகமாகப் பத்திசெய்யப்படும் தேவமாதாவின்படம் உலகமுழுவதிலும் வேறெதுவுமேயில்லை. ஓர்பாலியனை இருந்தபோது இந்தப்படத்தின்முன்பாக மன்ரூடும் வழக்கமுடையவராயிருந்த ஒன்பதாம் பத்திநாத பாப்பானவரே பொதுமக்களின் வணக்கவழிபாட்டுக்கென்று திரும்பவும் இது பகிரங்கமாக வைக்கப்படவேண்டுமெனக் கட்டளையிட்டார். மேற்கிந்திய தீவுகளைச் சேர்ந்த ஹெயிற்றிஎன்ற குடியரசுநாட்டின் பாதுகாவலாளியாகச் சதாசகாயமாதா ஏற்படுத்தப்பெற்று, அங்கே வெகுவாகப் பக்திசெய்யப்பெற்றுவருகின்ரூர். இந்தத்தீவின் அரசாங்கம் 1942-ம் ஆண்டு வழமையான தபால் முத்திரைகளும், ஆகாயத்தபால் முத்திரைகளுமாகப் பதினைந்துஇனத் தபால் முத்திரைகளைச் சதாசகாயமாதாவின் புராதன சித்திரப்படத்தின் அழகுகுன்ரூத பிரதிமைகளுடன் பாவனைக்கு விடுக்கலாயிற்று.

மற்றும்ஓர் பாதிரியார்

ஸ்கொத்திலாந்திலே எபிஸ்கோப்பல் புறொட்டஸ்தாந்த சபையைச்சேர்ந்த அபர்டீன் மேற்றிராசனத்தைச் சேர்ந்த ஓர்முன்னாள் கனன்பாதிரியாரானகனம். ஜோண்உவற்றி அவர்கள் மனந்திரும்பி எடின்பேர்க்நகரிலே கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்திருக்கின்ரூர். தாம் கத்தோலிக்கதிருச்சபையில் சேர்ந்துகொண்டதற்கான உண்மைக்காரணம், தென்னிந்தியசபைசம்பந்தமாய் அங்கிலிக்கன் புறொட்டஸ்தாந்த தலைவர்கள்சபை செய்துகொண்ட தீர்மானமேயெனப் பத்திரிகைநிருபரிடம் இவர்தெரிவித்தனர். இவர் 1908-ம் ஆண்டு லண்டன்நகரிலே ஓர்பாதிரியாராக அபிஷேகஞ்செய்யப் பெற்றிருந்தார். முன்னர் கனம். வால்ற்றன் ஹன்ஸ், கனம்.ஹியுரோஸ் வில்லியாம்ஸன்எனும் பாதிரிமாரும், மற்றுஞ்சிலரும் தாமாகவே மனந்திரும்பிக் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்துகொண்ட உடன்காரணமும் அங்கிலிக்கன் தலைவர்கள்சபை தென்னிந்திய சபை விஷயமாய்ச் செய்துள்ள தீர்மானமாகும்.

கடவுள்இல்லாத உலகம்

இரண்டாவது உலகயுத்தம் நிகழ்ந்தகாலத்திலும், அதற்குமுனனரும் ஜேர்மன்நாஸிகள் புரிந்தபயங்கர அட்டூழியச்செயல்களில் அதிகமானவைகள் ஹிற்லரினது மூர்க்காவேசங்கொண்ட சூரூவளிப்படைகளாலேயே நடைபெறலாயின. யுத்தமுடிவிலே சிறைபிடித்து ரூஷிய சிறைமுகாங்களில் வைக்கப்பட்டிருந்து, ஜெனிவாநகர் உடன்படிக்கையின்பயனைச் சமீபத்திலே விடுதலையடைந்த ஆயிரக்கணக்கான ஜேர்மன் யுத்தகைதிகளில் இந்தச்சூரூவளிப்படையைச் சேர்ந்தவர்களும் அநேகராவர். இவர்களிலே சிலர் கத்தோலிக்கராகத் திரும்பியிருக்கிரூர்கள். அப்படையைச்சேர்ந்த உயர்தரஅதிகாரிஒருவர் மேற்குஜேர்மனிக்குத் திரும்பியதும், "கடவுள் இல்லாமலே நாம் ஓர்உலகத்தைச் சிருட்டிக்கவிரும்பினோம்; ஆனால், இப்போதுநாம் அதைக் கண்டுகொண்டோம்; எல்லாத்துக்குமாக நான் ஆழ்ந்தகவலை கொள்ளுகிறேன்; இப்போது நான் சரியானவழியைக் கண்டுகொள்ளத்தக்கதாக எனக்கு உதவிபுரியுங்கள்" எனக் கூறிநின்ரூர். மற்ரூருவர் வரவேற்புமுகாமில்நின்ற ஓர்கத்தோலிக்க குருவானவரிடஞ் சென்று, "நான் ஓர்வைத்தியமாணவனாய்இருந்தேன்; ஆனால், நான் சிறைச்சாலையில் இருந்தபோது ஓர்குருவாகவரத் தீர்மானித்தேன்; திரும்பவும் சுதந்திரம்அடைந்ததற்கு இதுஎன் நன்றியாகும்" எனக்கூறினர்.

மரியாயின்சேனையும் கம்யூனிஸமும்

இங்கிலாந்திலே லிவர்ப்பூல் நகர் அதிமேற்றிராசனத்தில் மரியாயின்சேனை ஸ்தாபகமான வெள்ளியூபிலிவிழாவின் ஞாபகார்த்தமாக அன்றுஞாயிற்றுக்கிழமை அந்நகரில்நிகழ்ந்த ஓர் மகாநாட்டிலே சீனதேசமரியாயின்சேனையின் முன்னாள் தலைவரான வண. அய்டன்மைக்கிரூத் சுவாமியவர்கள் பேசியபோது: "மரியாயின் சேனையானது கம்யூனிஸத்துக்குப் பரிபூரணமான ஓர் மாறுத்தரமாகும்; சீனாவிலே கம்யூனிஸ்தர்கள் என்னைக் கைதுசெய்தபோது, நான் வைத்திருந்த மரியாயின் சேனைக் கைத்துணைப் புத்தகத்தைப் பறித்தெடுத்து, அதனைப் படித்துவிட்டு, "இது சரியாய்க் கம்யூனிஸத்தைப்போல் சிறந்த ஓர்ஸ்தாபனமாகும்" என்றுஎன்னிடம் கூறினர்கள்; மரியாயின் சேனையும், கம்யூனிஸமும் ஏககாலத்திலே வளர்ந்துவந்திருக்கின்றன; இவற்றிலேஒருஸ்தாபனம் டபிளின்நகரிலே ஸ்தாபிக்கப்பட்டுப் பிறெசீடியாஎன்று அழைக்கப்படும் கிளைகளை உபயோகப்படுத்தி, பந்திமுறையில் செயலாற்றிவருகின்றது. மற்ற ஸ்தாபனமோ அதேவிதிமுறைகளையே, ஆனால், கொடியஅழிவின்முடிவிற்கே பயன்படுத்துகின்றது; இவ்விரண்டும் 1949-ம் ஆண்டுதான் சீனாவில் நேர்முகமாகச் சந்தித்துக்கொண்டன; மரியாயின்சேனை உயிரற்ற ஓர் ஸ்தாபனம் அல்லவென்பதைச் சீனாவிலே அதன் அங்கத்தவர்கள் காட்டிவிட்டிருக்கின்ரூர்கள்" எனக் கூறியிருக்கின்ரூர்.

● பாகிஸ்தானிலே சமீபத்தில்உண்டான பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்டுப் பெரும் கஷ்டநஷ்டத்துக்குள்ளான மக்களின் கஷ்டநிவாரணத்துக்கென்று ஆஸ்திறேலியதேச சிட்னிநகர செல்வீன்சென்ற டூபோல தபசபை 13,500 ரூபா அனுப்பிவைத்திருக்கிறது. இந்தப் பணத்துடன் சிட்னிநகர அதிமேற்றிராணியாரான கருதினல் கில்ரோய்ஆண்டவரிடமிருந்து ஓர் அனுதாபசெய்தியும் போய்ச்சேரலாயிற்று.

கத்தோலிக்க சமாச்சாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகை

போதுக் கருத்து: தபசு மனப் பான்மை வளரும் படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன் கருத்து: தென்னமெரிக்க இந்தியர், நீக்ரோவர்மத்தியில் வேதபோதக அலுவல் தடைபடாதிருக்க மன்றாடிக்கொள்வது.

சத்தியவேத
பாதுகாவலன்
1955-ம் ஆண்டு
கார்த்திகை மாதம் 24-ந் திகதி

பிரான்ஸ் தேசம்

—II—

இன்று பரீஸ்நகர் அதிமேற்றிராணியாராய் இருந்துவருகிறவர் கருதினல் பெல்தின் ஆண்டவர். இற்றைக்கு 50வருடங்களின்முன்னர் பிரான்சில்நடந்தேறிய பயங்கரவேதகலாபனையின்விளைவாய் அங்கு திருச்சபைக்குப் பாதகமான நிலைமை ஏற்பட்டது. இந்தநிலைமையிலே கருதினல் பெல்தின் ஆண்டவர் ஓர்குருத்துவமாணவராய் இருந்தபோது, இவர் படித்துவந்த சென்சல்பிலின் குருமடத்திலிருந்து வேதவிரோதிகளால் வெளியேற்றப்பட்டார். பரீஸ்நகரிலே பெரிதும் நிந்தாட்சணைசெய்யப்பெற்றார். அங்ஙனமாக, சமீபத்திலே லண்டன்மாநகர் சென்றிருந்த இவர் அங்கே யாது தெரிவித்திருக்கின்றார்?

"பிரான்ஸ்தேச முழுவதிலுமே பிரமிக்கத்தக்க விதமாகச் சமயமறுமலர்ச்சி உண்டாயிருக்கிறது; பாடசாலை மாணவர்கள் முதல் பண்டிதர்கள் வரையில், முதியவர்களும், இளைஞர்களுமான எல்லவர்கள் மத்தியிலும் எக்கெங்குமே உண்மையும், பலனுள்ளதுமான கத்தோலிக்க மயம் காணப்படுகின்றது. அரசியலிலும் அதேவிதமாகவே காட்சியளிக்கின்றது; ஆகக்கடுந்த இடதுசாரிக்கட்சிகள் நீங்கலாக, ஒவ்வோர் அரசியற் கட்சியிலுமே திடவிசுவாசமும், சிறந்த வேதானுசாரமுமுள்ள கத்தோலிக்கர் காணப்படுகின்றனர்; சமயசம்பந்தமான திருவைபவங்களிலே அரசாங்கமந்திரிமார் சமூகமளிக்கின்றனர்; இந்நாட்களில் இடையறுமலே இது சம்பவித்து வருகின்றது; ஞாயிற்றுக்கிழமைகளிலே வீதிகளிலே பெண்மணிகளைப் போன்று ஆடவர்கள் அநேகர் தங்கள் பூசைப்புத்தகங்களையுங் கொண்டு, கோவிலுக்குப்போவதை எவருங் காணக்கூடியதாய் இருப்பதுபோல, இந்த மந்திரிமாரும் அத்திருவைபவங்களில் உள்ளபடியே கலந்துகொள்வதை எவரும் கண்டுகொள்ளலாம்; சிலவேளை நாம் காலையில் அதிகநேரம் பிந்திப் பெரிய பாடற்பூசை நிறைவேற்றும்போது, விசுவாசிகளுக்குத் திவ்வியநன்மைவழங்க மூன்று அல்லதுநான்கு குருமார் நமக்குத் துணைச்செய்யவேண்டியிருக்கின்றனர்; சமீபகாலத்திற்கு முன்பு இதுகேள்விப்படாத ஓர் காரியமாகும்" எனக் கருதினல் ஆண்டவர் தெரிவித்திருக்கின்றார். காலத்துக்கேற்ற கோலமாகப் பிரான்ஸிய அதிமேற்றிராணிமாரும், மேற்றிராணிமாரும் சமயசம்பந்தமாய்ப் புதிய முறைகளைக் கையாளவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. அவற்றிலே, "குருதொழிலாளரின் அப்போஸ்தலத்துவ" மும் ஒன்றாகும். இன்றைய நவமான தொழிலாளர் உலகத்திலே கத்தோலிக்க தொழிலாளர்கள் லோகாயத கொள்கைகளை எதிர்த்து நின்றுபிடிக்கத்தக்க தாய்க் குருதொழிலாளர்களின் அப்போஸ்தலத்துவம் ஆவசியகமென்பதும், புதிய தொழிலாளர்உலகம் மிகவும்விசேஷப்பட்டதாகவே, அதனைக் கட்டியெழுப்பத் தொழிலாளர்களுடன் சேர்ந்து வேலை செய்கிறவர்களும், அவர்களது வாழ்க்கையிலே பங்குபற்றுகிறவர்களுமான குருமார் அவசியமென்பதும் அவர்களுக்குப் புலப்படலாயிற்று. அதனல், இந்தக்குருதொழிலாளரின் அப்போஸ்தலத்துவம் பிரான்ஸிலே கத்தோலிக்க தொழிலாளருக்குச் சமயவிஷயமாய் மறுமலர்ச்சியை உண்டுபண்ணுமென்று சொல்லவேண்டியதில்லை. இன்னும் பிரான்ஸ் தேசமுழுவதிலும் கத்தோலிக்க சேவை பரக்கநடைபெற்று வருவதும், அரசாங்கத்தினிடமிருந்து ஒரு செம்புச்சல்லி தானும் உதவிபெறாமலே பரீஸ்நகரில் 135கோவில்களும், சிற்றாலயங்களும் சமீபகாலத்தில் கட்டியெழுப்பப்பட்டிருப்பதும், கத்தோலிக்க எழுத்தாளர்பலரும் கத்தோலிக்கநூல்களை அதிகமதிகமாக எழுதிப் பரப்பிக்கொண்டுவருவதும் அங்கே கத்தோலிக்க சமய மறுமலர்ச்சிக்குப் போதிய சான்றுகளாகும். ஆகவே, பிரான்ஸ்தேசம் திருச்சபையின் சிரேஷ்டகுமாரத்தினென்ற தனது சிறப்புப்பெயரைத் திரும்பவும் ஈட்டிக்கொள்ளும் காலம் அதிகம்தூரத்தில் இல்லையென்றே நம்பியிருக்கலாம்.

> கல்வியின்தன்மை இல்லாதவனை மிருகமென்று சொல்லிவிட முடியாது. ஆனல், மனிதத்தன்மை இல்லாதவனை மிருகமென்று அழைக்கலாம்.

யோசேவாஸ் முனிவர்

சரித்திரத் துணுக்குகள்

[14]

ஆற்றைக் கடந்தார்!

ஒருமுறை யோசேவாஸ் முனிவர் கண்டிநகரத்திலிருந்து சிலாபத்துக்குச்சென்று, அங்கிருந்து புத்தளத்துக்குப் போகக்கருதி மயிணை ஆற்றங்கரையைச் சேர்ந்தார். அவ்வாறு காட்டிலே பெய்த பெருமழைகாரணமாகப் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது. ஆற்றைக் கடந்து அக்கரைக்குப் போகமுடியாமல் பலபிறசமயத்தவர்களும், சோனகர்களும் தங்கள் ஆடுமாடுகளோடும், மூடைமுடிச்சுகளோடும் ஆறு வற்றும்வரையில் காவலிருந்தார்கள். யோசேவாஸ்முனிவர் அதிதீவிரமாக அக்கரைக்குச் சேரவேண்டிய அவசியமிருந்ததால் கரையில் காவலிருப்பவர்களை வினவினர்.

"நாங்கள் பலமுறை தடிவிட்டுப்பார்த்தும் நீர் சிறிதும் குறைவதாயில்லை; நீரோட்டத்தின் விரைவினல் கால்களை நிறுத்தவும் முடியவில்லை. ஆகையால், பெருக்குக்குறையும் வரையும் பார்த்திருக்க வேண்டியதுதான்" என்றார்கள்.

யோசேவாஸ்முனிவர் சர்வேசுரனிடத்தில் தமதுமுழுநம்பிக்கையையும்வைத்துத் தம்முடன் கூடவந்தவர்களையும், தம்மிலே நம்பிக்கையுள்ளவர்களையும் தம்மைப் பின்தொடர்ந்து வருமாறு கூறி முன்னேநடக்க ஆரம்பித்தார். சிலபிறசமயத்தவர்களும் அவரிலே நம்பிக்கையாகத் துணிவுடன் பின்சென்றார்கள். சோனகர்கள் அந்தத் துணிவு புத்தியீனமானதென எண்ணி வேடிக்கையாகப் பார்த்துக் கொண்டுகரையிலேநின்றார்கள்.

முனிவர் மோசேசைப்போல் ஒரு ஊன்றுகோலைக் கையிற் பிடித்து ஆற்றின் நடுவிலே போய்நின்றபோது ஆறு முழங்காலுக்குமேல் தண்ணீர் ஏறுததைக்கண்டு தம்மைப் பின்தொடர்ந்தவர்களை அழைத்து அக்கரைக்குச் செல்லுமாறு கூறி யாவரும் கடந்து சென்றபின் தாமும் நடந்து சென்றார்.

யோசேவாஸ்முனிவரும், அவரைப் பின்சென்றவர்களும் ஒரு தீங்குமில்லாமல் அக்கரைசேர்ந்தமையால் ஆற்றில் சலம் குறைந்துவிட்டதாகச் சோனகர்கள் எண்ணித் தாங்களும் உடனேயே ஆற்றைக்கடக்கச் சில அடிதூரம் நடந்தார்கள். முனிவர் மற்றக்கரை அடைந்த உடனே இருகரைகளாலும் நீர் பெருகி அலைமோதிக்கொண்டு விரைவாகப்பாய்கிறதைக்கண்டு வெட்கத்தோடு திரும்பினர்கள்.

யோசேவாஸ் முனிவர் ஆற்றில் இறங்கியபின் உயரமான இடத்திலிருந்து வந்ததண்ணீர்ப் பெருக்குக் கீழே இறங்காமல் பளிங்கு மலைபோலத் திரண்டு உயர்ந்துநின்றதென்றும், அவர் அக்கரைசென்றதும் நீர்ப்பிரவாகம் அதிகமாய் ஓடிற்றென்றும் அவர்கள் அதிசயத்தோடு சாட்சிசொன்னர்கள்.

—அமுது

சதாசகாயமாதா கோணம்

—:—

"ஆச்சரியமான மாதா"

எனக்கு நேர்ந்த ஆபத்துகளிலெல்லாம் அதிகம்பாரதூரமான ஆபத்திலே நீர் ஆச்சரியமானவிதமாகத் தலையிட்டு என்னைக் காப்பாற்றியதற்குத் தகுந்தவிதமாக நன்றிகூற என்னல் முடியவே முடியாது. ஏற்றசொற்களாற் போற்றித்துதிக்கவும் என்னல் இயலாது.

இரண்டுமாதங்களுக்குமுன் எனது கத்தோலில் ஒருபெருந்தொகையான பணம் காணுமற்போகவே, நான் வேலையிலிருந்து தடுத்துவைக்கப்பட்டேன். இத்தக்களவுக்கு நான் உடந்தையில்லாதிருந்தாலும் நானே குறித்தபணத்துக்குப் பொறுப்பாளியாக விருந்தேன். எனதுமேலதிகாரிகளுக்கு மறுமொழி சொல்லவேண்டியவன் நான்தான். நான் நிர்அபராதியென்று எண்பிக்க என்னற்கூடிய பாடுபட்டும் காரியங்கைகூடவில்லை. இன்னுந்தொடர்ந்து வாதாடுவதால் ஒருபிரயோசனமும் உண்டாகாதென்ற முடிவுக்கு வந்துவிட்டேன். எனக்குஎதிராகச் சாட்சியங்கள் குவித்துகொண்டிருந்ததால் இந்த அவமானத்திலிருந்து தப்ப ஒரேஒரு வழி தற்கொலைசெய்வதுதான் என்று தீர்மானித்துக்கொண்டேன்.

கத்தோலிக்கரல்லாத என்நண்பர்களில்ஒருவர் பொறளையில்உள்ள உமது திருசேத்திரத்தக்கு என்னைக்கொண்டுவந்து, நோவனைச் செபப்புத்தகம்ஒன்றை எனக்குக் கொடுத்து உம்மிடம் மன்றாடச் சொன்னர். சொற்பசாப்பாட்டுக்கே நான் வெளியிற் சென்றதல்லாது, மற்றப்படி ஆறுமுழுநாட்களாக உமது பாதத்தண்டை தெண்டனிட்டிருந்தேன். செபம்செய்வது எப்படியென எனக்குத் தெரியாது. "நான் குற்றவாளி அல்ல" என்றுமட்டும் உமக்குத் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருந்தேன்.

ஏழாம்நாட்காலை எனது முதலாளிகள்முன் அசராகும்படி ஓர்அவசர தந்திச்செய்தி கிடைத்தது. அங்கலாய்ப்புடன் சென்றேன். களவு கண்டுபிடிக்கப்பட்டதென்றும், என்மேற்சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள்எல்லாம் நீக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டனவென்றும், வேலைத்தடை நிறுத்தப்பட்டதென்றும் தெரிவித்தார்கள்.

நான் ஒருகிறீஸ்துவன் அல்ல. ஆனால், இப்போது ஆச்சரியமான தாயாரின் வல்லபத்தையும், இரக்கத்தையும் அறிந்து விசுவசிக்கிறேன். சதாசகாயமாதாவே! என்மரண பரியந்தம் உமக்கு நன்றியுள்ளவனாய் இருப்பேன். X.

* * *

"ஏழைகளின் தாயார்"

நான் ஓர்வாலிபன். கடந்த 5 வருடங்களாக ஒருவிதவேலையும் இல்லாது தவித்தேன். எடுத்த பரீட்சைகளில் எல்லாம் சித்திஅடைந்திலேன். என் பிற்கால சீவியத்தை நினைந்து மனம் வருந்தினேன். கடைசியாக உம்மிடம்வந்தேன். என்குறைகளை முறையிட்டேன். ஒருகுழந்தையைப்போலக் கூவிஅழுதேன். தாயே, நான் கேட்ட எல்லாவற்றையுங் கொடுத்தீர். ஒரு வர்த்தகர்சாலையில் எனக்கு ஒருஉத்தியோகம் பெற்றுத்தந்தீர். ஆறுமாதங்களுக்குள் உத்தியோக உயர்ச்சியுங் கிடைத்தது. உமது தாயன்பு என்னை ஒருபுதுமனிதனாக்கியது. என்சீவியத்தில் ஒருபுதுஒளி பிரகாசிக்கிறது. நான் சந்தோஷமாகவும், நிம்மதியாகவும் சீவிக்கிறேன். ஏழைகளின் தாய், சமாதானத்தின் இராக்கினி, கிறீஸ்துவர்களின் சகாயம் என்பதற்கு இது அத்தாட்சியாயிருக்கிறது. சதாசகாயமாதாவே! உமக்கு என்நன்றி என்றும் உரியதாகுக. V. R.

பாத்திமா கேடய - கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள்

பாத்திமாகேடயத்துக்கும், கிண்ணத்துக்குமாக வடமாகாணத்திலுள்ள கத்தோலிக்க கல்லூரிகளைச்சேர்ந்த மாணவர் கோஷ்டிகளிடையே நடைபெற்றுவந்த உதைபந்தாட்டங்களின் ஈறுந்தபோட்டிகள் சென்ற 19-11-55 சனிக்கிழமை பிற்பகல் யாழ்ப்பாணம், அர்ச். பத்திரிசியார்கல்லூரி — இளவாலை, அர்ச். என்றியரசர் கல்லூரிக் கோஷ்டிகளுக்கிடையிலே, அர்ச். என்றியரசர்கல்லூரி விளையாட்டுமைதானத்திலே, பரிசிற் கேடயத்தையும், கிண்ணத்தையும் சங்மானித்த கத்தோலிக்கபிரமுகரான திரு. சி. எஸ். நாயகம்அவர்களும், அநேககுரவர்கள், ஆசிரியர்கள், மாணவர்களும், மற்றும் பெருந்திரளான தரிசகர்களும் குழுமியிருந்தசமூகத்திலே பெரிதும்உற்சாகமாக நடைபெறலாயின. அர்ச். என்றியரசர்கல்லூரி விளையாட்டுமைதானம் தனதுசரித்திரத்திலேயே கண்டுகேட்டிராத அத்தனைபெரும் சனக்குழாமினதும் ஆர்ப்பரிப்புகள், ஆனந்தக் கூச்சல்கள் மத்தியிலே மூன்று இருகல்லூரிகளினதும் இரண்டாவது பிரிவுக் கோஷ்டிகளிடையே போட்டி ஆரம்பமாகி ஒவ்வோர்கோஷ்டியும் கவர்ச்சிகரமாக ஒவ்வோர் கோல்போட்டன. ஈற்றில் கோல்கள் சமமாயிருந்தமையால் மேலும் பத்து நிமிஷங்களுக்குப் போட்டிநீடிக்கும்படி செய்துவிடப்பட்டும் எந்தக்கோஷ்டியும் கோல்போட வேயில்லை. பின்த இருகல்லூரிகளினதும் முதலாவதுபிரிவுக் கோஷ்டிகளிடையே பெரும்ஆரவாரத்துடன் போட்டி ஆரம்பமாயிற்று. ஒன்றுக்கொன்று பின்போகாது இருகோஷ்டிகளும் விளையாடியபோதிலும் முதல் அரைமணிநேரத்திலும் அர்ச். பத்திரிசியார் கல்லூரிக்கோஷ்டி இருகோல்கள்போட்டது. பிந்திய அரைமணிநேரத்திலும் அவைகள் முன்னிலும் மிகுந்தவீராவேசத்துடன் விளையாடத் தொடங்கியும் அதைக் குழப்பியடிக்க வந்ததுபோல் மழைவிடாதுபொழியத் தொடங்கியது. ஆயினும், மழையையும் பறுவாய்பண்ணாது அவைகள்விளையாடினவாயினும் பந்து அவர்களுக்கு இடந்தரவில்லை. அதனால், போட்டி இடையிலே நிறுத்தப்படலாயிற்று. முடிவிலே முன்போலக் கேடயத்தை அர்ச். பத்திரிசியார்கல்லூரியும், கிண்ணத்தை அர்ச். என்றியரசர்கல்லூரியும் வைத்திருக்கலாமென முடிவுசெய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

— நிருபர்

கத்தோலிக்க பாடசாலைகளின் ஆரம்பம்

1956-ம் ஆண்டின் முதலாந்தவணை மாதம் 9-ந் திகதி ஆரம்பமாகும். மறுதவணைகளும், பகிரங்க விடுமுறை நாட்களும் பின்னர் அறிவிக்கப்படும்.

S. Emmanuel, O.M.I.
Acting Gen. Manager,
R. C. Schools,
Jaffna.

பாண்டியந்தாழ்வும் பிரியாவிடையும்

கடந்த சிலஆண்டுகளாக கல்லூர் விசாரணைப்பங்குடன் இணைக்கப்பட்டிருந்த பாண்டியந்தாழ்வு அதிலிருந்து பிரிக்கப்பட்ட செய்தியானது இப்பதி மக்களுக்குப் பெருங்கவலையைத் தரலாயிற்று. அதனால், இன்றுவரை எம்பதியிலே அருந்தொண்டாற்றித் தமது ஞானமக்களின் ஆத்மீகவளர்ச்சிக்காக அரும்பாடுபட்டுழைத்த கட்டளைக்குரவர் வண. ஜே. பிரான்சிஸ்சுவாமியவர்களுக்கும், வண. பி. சூசைப்பிள்ளை சுவாமியவர்களுக்கும் அவர்களின் சேவைகளம்பாராட்டி ஓர்பிரியாவிடைவைபவம் சென்ற 19-11-55 சனியாரம் பிற்பகல் சிறப்பாக நடந்தேறியது. அன்று கார்மேகம் கவலைமிக்கதாய்க் கண்ணீர்த் தாரைகள் சொரிந்தவண்ணமாயிருந்தது. ஆனால், அதன்கலக்கத்தைக்கண்டும் கலக்கமடையாத எம்பதிமக்கள் கோவில் முன்றிலைச் சிறப்பாக அலங்கரித்தார்கள். ஒலிபெருக்கியின் இசைப்பெருக்கைக் கேட்டமக்கள் அங்குவந்து சரிந்தவண்ணமிருந்தார்கள். சுமார் மாலை 6 மணிக்கு எம்புதிய கட்டளைக்குரவர் வண. ஏ. லெபோன்சுவாமி யவர்களும், பிரியாவிடைநாயகர்களான சுவாமிகளும் மகிழ்ச்சிபொங்க மலர்மாலைசூட்டி வரவேற்கப்பெற்றார்கள். உள்ளத்தை உருக்கும்பிரியாவிடைக்கீதங்கள்பாடிக் கண்ணீர் வடித்தார்கள். உபசாரப் பத்திரங்கள் படித்துக்கொடுத்தார்கள். ஆசிரியர் பி. அருளானந்தம்அவர்களும், ஆசிரியர் எஸ். அந்தோனிப்பிள்ளை அவர்களும், திரு. பி. ஜேம்ஸ் சின்னராசா அவர்களும் குரவர்களின் மகத்தான சேவைகளைப் பாராட்டிச் சிறந்த பொருட்பொழிவு ஆற்றி நின்றார்கள். ஈற்றில் பிரியாவிடைநாயகர்களின் அன்புரையோடு விழாவைபவம் நிறைவாயிற்று.

— நிருபர்

சிந்தைக்கு விருந்தாகும் சுத்தவாளரின் சரிதங்கள்

—: ஆசிரியர், எல். பாக்கியநாதர் :—

(சென்றவாரத் தொடர்ச்சி)

காலப்போக்கில் திருச்சபையின்வைரிகள் வென்செஸ்லாஸின் வைரிகளாகவே மாறினர். அவரைத்தொலைத்துவிட அவர்கள் திட்டமிட்டனர். தேவதொண்டனை வென்செஸ்லாஸைத் தேவதொண்டிற்குப் போகும்போதே முடிவுகட்ட முடிவுசெய்தனர். சதிகாரர்கூட்டத்திற்கு அரசரின்சகோதரனே தலைமைவகித்தார். சகோதரனே தலைமைவகிப்பது சதித்திட்டத்தின் வெற்றிக்கு இலகுவாகஇருந்தது. அவர்கள் எண்ணியபடியே, அதிதூதரான அர்ச். மிக்கேல்திருநாளின் நடுச்சாமப் பூசைக்குப் பரிசாரகராகச் சேவைசெய்யும்படி அரசர் தேவாலயத்துள் புகுந்தார். பலிபீடத்தடியில் பணிசெய்து தேவனைத்துதிக்கவந்த அரசரைப் பலிபீடத்தில்வைத்துத் தோத்திரிக்கப்பண்ணுவது தேவனின்சித்தமாயிற்று. ஆண்டவன்சித்தத்தைத் தூற்றியஅலகைகளே எந்தஅதிதூதன் பாதாளத்தில் உந்தித் தள்ளினரோ, ஆண்டவன்சித்தத்தைப் போற்றியஅரசனே அந்தஅதிதூதனே பரலோகத்திற்கு ஏந்திச்செல்வதும் தேவனின் சித்தமாயிற்று. பலி ஒப்புக்கொடுக்கவந்த மன்னரைப் பலியாக ஒப்புக்கொடுத்தனர் சதிகாரர். நற்கருணாதரின்முன்பு தமதுசீவியத்தின் ஒருசிறுபங்கைச் செலவிடவந்த வேந்தனை முழுச்சீவியத்தையுஞ் செலவிடும்படி கொலைசெய்தனர். அரசர் வருகிறார் என்று அவரைஉவகையுடன் வரவேற்ற மக்கள் அரசர்பிரிகிறார்என்று அழுது அரற்றினர்.

குற்றுயிராய்க்கிடந்த வேதசாட்சி தமதுகொலைஞரை நோக்கினர். அவர்களுள்ளே தமதுசகோதரனையுங் கண்டார். கண்டவர் அவர்கள்மேல்இரங்கி அவர்களைமன்னித்தார். அவர்களுக்காகப் பரமபிதாவிடம் மன்னிப்புக்கேட்டார். எந்தத்தேவாலயத்தில் தேவனைத்தோத்திரிக்க வந்தாரோ, அந்தத் தேவாலயத்திலிருந்து அவரைநித்திய மூர்த்தியஞ்செய்யச்சென்றார்.

சிருட்டிகரின் சித்தத்தை நிறைவேற்றுவதே சிருட்டியின் நோக்கம். நாம் எந்தச்சுத்தவாளரினதும் சரிதத்தை ஆராய்ந்துபார்த்தாலும் அந்தச் சுத்தவாளர் இதேநோக்கத்தை நிறைவேற்றியுள்ளதைக்காண்கிறோம். அரசபீடத் தமர்ந்திருந்த அர்ச். வென்செஸ்லாஸ் தேவசித்தத்தை நிறைவேற்றுவதன்மூலம் அரசுபுரிந்தார்என்று கண்டோம். இராட்சகர்சபைத் துறவியாகிய அர்ச். ஜெரூட்டும் தேவசித்தத்தை நிறைவேற்றிக்கொண்டே சீவித்தார்என்று அவர்சரிதங் கூறுகின்றது.

தேவனுடைய திட்டமும், மனிதனுடைய திட்டமும் அநேகம்முறைகளில் மாறுபாடானவை. ஒருவனை ஒருபதவிக்கு நியமிக்கும்பொழுது அவன் அந்தப்பதவிக்குத் தக்க அனுபவசாலியா என்பதையும்ஆராய்கின்றனர். அர்ச். ஜெரூட்டை ஒருபாதுகாவலராக நியமிக்கவேண்டும்என்று மனிதன் எண்ணினால் நிச்சயமாகவே அவரைப் பிரயாணிகளின் பாதுகாவலராக, அன்றேல் பிணியாளரின் பாதுகாவலராகநியமித்திருப்பான். தேவனோ அவரைஅப்படி நியமிக்கவில்லை. அவரைத் தாய்மாரின் தஞ்சமாகவே நியமனஞ் செய்திருக்கிறார். தாய்மாரின் அங்கலாய்ப்பை அனுபவியாத ஒருதுறவியே அவர்களின் அங்கலாய்ப்பில் அவர்களுக்கு ஆறுதல்செய்யும்படி அருக்கிரகஞ்செய்திருக்கிறார். பிரசவத்தின் கஷ்டத்தைக் கனவிலுங்கேட்டறியாத ஒருசுத்தனையே பிரசவிப்போரின்பாதுகாவலராக உலகம் போற்றவேண்டுமென்பது தேவதிருவுளம்.

காணாத பொருட்களைக் காட்டித் தரும்படி கோடியற்புதரை எவ்வாறு நாம் கையெடுக்கிறோமோ அவ்வாறே பிரசவவேதனையை எதிர்நோக்கியிருக்கும் பெண்மணிகள் அர்ச். ஜெரூட்டைக் கையெடுக்கிறார்கள்.

ஓர்இத்தாலியனுகப் பிறந்த அர்ச். ஜெரூட் இத்தாலியிலேயே மூதன்மூதல் தாய்மாரின்பாதுகாவலராகப் போற்றப்பட்டார். இன்றைக்கு இவர் உலகம்அடங்கலும் இப்பெயராலேயே பிரசித்திபெறுகிறார். இவர்பெயரைத் தரித்திருக்கிற வைத்தியசாலைகளும், இவருடைய பாதுகாவலில் ஒப்படைக்கப்பட்டிருக்கிற பிரசவவிடுதிகளும் இன்று ஆயிரமாயிரமாக உண்டு. அநேகபிரசவவிடுதிகளில் இவரைப்பற்றிய பத்திமுயற்சிகள் நடைபெறுகின்றன. இவரைப்பற்றிய துண்டுப்பிரசுரங்களைப் பரப்புவதும், இவரதுஉருவம்பதித்த பதக்கங்களை உபகரிப்பதும் இவர்போல் நடைபெறும் அநேக பத்திமுயற்சிகளில் ஒருசிலவாகும்.

பிரசவத்தின் பயங்கரத்தினால் தத்தளிப்போருக்கு அர்ச். ஜெரூட்டின் பதக்கம் ஆறுதல்அளிக்கின்றது. "இன்னஇன்ன சந்தர்ப்பங்களில், இன்ன இன்னவகையில் அர்ச். ஜெரூட் எங்களைக் காப்பாற்றியிருக்கிறார்" என்று அநேகதாய்மார் அவருக்குத் துதிமாலை சூட்டுகிறார்கள்.

பிரசவிக்கும்பெண்கள் மாத்திரமல்ல, பிரசவியாத பெண்களுமே இவரிடந் தஞ்சமடைகின்றனர். மலடிஎன்ற வசையில் மனமடிவுற்றிருந்த அநேகர் அர்ச். ஜெரூட்டின் அனுக்கிரகத்தினால் பிள்ளைப்பேறு பெற்றுள்ளனர் என்றும் அநேக புதுமைச்சம்பவங்கள் கூறப்படுகின்றன.

"அற்புதவரத்தர்" என்று தமது ஆயுளின்போதும் அழைக்கப்பட்ட அர்ச்சியசிட்டர்கள் இருவர். இவர்கள் இருவரும் அற்புதவரத்தில் ஒருவருக்குஒருவர் இணையானவர். ஒருவர் அர்ச். பதுவை அந்தோனியார். மற்றவர் அர்ச். ஜெரூட் மஜெல்லா. அர்ச். ஜெரூட் 1726-ம் ஆண்டு பிறந்தவர். தமது 23-ம் வயதில் இராட்சகர்சபையின் அங்கத்தவரானவர். அங்கத்தவராகியும் ஆறுவருடங்கள் மாத்திரம் துறவியாக இருந்தவர். இந்த ஆறுவருடங்களுக்குள்ளேயே அற்புதவரத்தை அடைந்தவர். அற்புதவரத்தர்என்று அறிக்கையிடப்பட்டவர். இந்த ஆறுவருடத்துள் அவர் ஆயிரத்திற்குமேற்பட்டபுதுமைகளை ஆற்றியுளர். அநேக பிணியாளரைத் தொட்டுச் சுகப்படுத்தினர். அநேகம்முறைகளில் அப்பங்களைப் பெருகப்பண்ணினர். "காற்றுக்கும் கடலுக்கும் கட்டளையிட்டார்" என்று நமது இராட்சாபெருமானைப்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செபமாலத் தியானம்

வியாகுல காரணிக்கங்கள்

— M. J. M. —

1. மரண அவஸ்தை

"அவரைவிட்டு ஓடிப்போனார்கள்."

சேவகர் யேசுவை இறுகக் கட்டி ஜெத்சேமனிய தோட்டத்திலிருந்து கைதியாகக் கொண்டு சென்றார்கள். அதைக்கண்ட சீஷர் அவரைக் கைவிட்டிட்டு ஓடினர்கள். கடைசிவிருந்தின் போது கொடுத்த எச்சரிக்கையையும், செயசீலராய்த் திரும்புவோமென்று யேசு கொடுத்த வாக்கையும் எவ்வளவுசீக்கிரத்தில் அவர்கள்மறந்தார்கள். பிரமாணிக்கமாயிருப்போமென்று அவர்கள் வற்புறுத்திக் கூறியதெல்லாம் காற்றாய்ப் பறந்துவிட்டது. எதிர்காலத்தை அவர்கள்நினைத்துக் கட்டிய கோட்டைகளெல்லாம் தற்கால துன்பத்தினால் அழிந்துவிட்டன.

செபமாலை நாயகீ! துன்பக்கடலில் நாம் அமிழ்ந்திப்போகும்வேளை எமக்குப் பரலோகநினைவு வரவும், உற்றார் உறவினர் எம்மைக் கைநெகிழும் வேளை தேவனில் எம்நம்பிக்கையை வைக்கவும் உதவிசெய்வீராக.

2. கசையடி

"பிலாத்து யேசுவைக் கசைகளால் அடிப்பித்தான்."

யேசு நிரபராதியென்று அறிந்தபோதிலும், கொந்தளித்துநின்ற சனக்கும்பலின் கோபத்தையடக்கநினைத்து, பிலாத்து யேசுவைக் கசைகளால் அடிக்கக் கட்டளையிட்டான்.

இக்கோரச்சம்பவம் எங்கள் சிலுவத்தில் எத்தனைதரம் நடக்கிறது. அற்பமாகவும், சிறிதென்றும் எண்ணி அதற்கு மேல் இடங் கொடுப்பதில்லையென்று நினைத்துக்கொண்டு கெட்டசகபாடிகளுக்கு இடங் கொடுக்கிறோம். இது வழுக்கல் பாதையில் சறுக்கினதுபோலாகிறதென்று உணரும்பொழுது காரியம் முற்றிவிட்டது. நாம் எமக்கே சதிமானஞ் செய்கிறவர்களாகிறோம்.

திருச்செபமாலை இராணீ! பசாசினதும், அவனுடைய ஏவலாட்களினதும் மாயவலையில்சிக்கிக் கொள்ளாமலிருக்க, ஆரம்பத்திலேயே நாம் மனஉறுதி கொள்ளும் வரந்தந்தருளும்.

3. முள்முடி தரிக்கப்பட்டது

"அவருடைய தலையில் முட்களால் பின்னிய முடியொன்றை வைத்தார்கள்."

சேவகர் யேசுவின்சிரசில் ஓர் முடியை வைத்தார்கள்; ஆனல், அது மகிமை முடியல்ல, முள்முடி. அவருக்குமுன் முழந்தாள் மடித்தார்கள். மெய்யான மரியாதைக்காகவல்ல, பகிடிபரிகாசமாக.

எங்கள் கொடிய சத்துராதிகளும் அப்படியே செய்கிறார்கள். உலகமகிமையை வாக்குப்பண்ணுகிறார்கள். ஆனல், அதில் மறைந்திருக்கும் முள் எம்மனச்சாட்சியைக் குத்துகிறது. நாம் புகழ்விரும்பிகளானல் எமக்குப் பரகசியமாய்ப் புகழ்மாலைபோடுவார்கள். ஆனல், மெய்மையாகத் தம்மனதில் எம்மையும், எமது புகழேந்திக்குணத்தையும் பரிகசிப்பார்கள்.

செபமாலை நாயகீ! துரோகிகளான சிநேகிதரிடமும், சத்துராதியின் கண்ணியிலுமிருந்து எம்மைக்காத்து, பெருஞ்சீவியத்தையும், செல்வத்தையும் இழக்கவேண்டியிருந்தாலும், எம்மனச்சுத்தத்தைப் பேணவரந்தாரும்.

4. சிலுவை சுமந்துசெல்லுதல்

"உன்சிலுவையைச் சுமந்துகொண்டு என்னைப் பின்செல்"

கல்வாரிக்குப் போகும்வழியில் சிலுவைப்பாரத்தினுல் யேசு மூன்றுமுறை விழுந்தார். விழுந்து திரும்பவும் எழுந்து சென்றார்.

செபமாலை இராக்கினியே! பாவச்சோதனையென்னும் சிலுவைப்பாரத்தினுல் நாம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருக்கத் தைரியம் தந்தருளும்.

5. சிலுவை மரணம்

"யூதாஸ் நான்றுகொண்டு செத்தான்."

யேசு வாக்குப் பண்ணின இராச்சியம் பூலோகத்துக்குரியதல்லவென்று உணர்ந்தபொழுது, தன் சதிமானத்தையிட்டு மனம்நொந்தான். ஆனல், தான்செய்த பாவத்துக்குப் பரிகாரஞ்செய்வதற்குப் பதிலாக அவநம்பிக்கைப்பட்டு, தன்னுயிரை மாய்த்துக் கொண்டான்.

இத்துக்க சம்பவத்திலிருந்து நாம்கற்கவேண்டியதென்ன?

முதலாவது பேராசையை விலக்கவேண்டும். இரண்டாவது, பேறுகளைக்கொண்டல்ல, நாம்செய்த முயற்சியைக்கொண்டும், அம்முயற்சியைத்தூண்டின நமதுநோக்கத்தைக் கொண்டும் நம்மைக் கணிக்கவேண்டும்.

செபமாலை இராணீ! எம்மால் இயன்ற திறமான முயற்சிசெய்யவும், முடிவுகளில் தேவசித்தத்தை யேற்றுக்கொள்ளவும் எமக்குக் கற்பித்தருளும்.

இயற்கை

—*—

எழில்தரு மியற்கையின் பீடம் — அது
இறைவனின் களஞ்சியக் கூடம்
பொழில்வனங் கடல்மலைக் கல்லும் — அவர்
போதகப் பெருமைகள் சொல்லும்.

இன்னிசைப் பறவையின் கீதம் — அது
இன்சொலைப் புகன்றிடும் வேதம்
பன்னிறப் பொன்மலர்த் தீபம் — மனப்
பங்கயத் தூய்மையின் ரூபம்.

மலைபெறு மருவியி னூற்று — உயர்
மாண்புறுஞ் சேவையின் கூற்று
அலைகடல் குழுறிடுஞ் சீற்றம் — பெரும்
ஆணவம் மாய்ந்திடுந் தோற்றம்

கொடும்புலி கரடிவாழ் காடு — சினங்
குடிபுகும் பெருமையின் வீடு
கடும்வெயில் பாலையின் கோரம் — மனக்
கனிவிலான் வாழ்வையே நேரும்.

மழைமுகி லிடைவரும் மின்னல் — அது
மண்ணிடைத் தோன்றிடும் இன்னல்
விளைபயிர் செழிப்புறும் வீறு — நாம்
விதைத்திடும் புண்ணியப் பேறு.

— 'ஜெயம்'

அறிவுச் சுடர்

✻ பிரித்தானிய தேசத்திலுள்ள அதிகம்புராதன கிறீஸ்துவகோவில் எது?

கன்ரபறிகரிலுள்ள அர்ச். மார்த்தினர் கோவிலேயாகும். இக்கத்கோவில்தான் கி. பி. 597-ம்ஆண்டு அர்ச். அகுஸ்தீனரால் எதெல்பேட் அரசர் ஞானஸ்நானம் அருளப்பெற்றார்.

✻ உலகில் அதிகமானபிள்ளைகளைப்பெற்றிருக்கும் தாயானவள் யார்?

இதுவரைகண்டறியப்பட்டுள்ளவரையில் 1872-ம் ஆண்டு காலஞ்சென்ற பெடோர் வயிலெற்என்ற ரூஷியரின் மனைவியேயாம். இவள் 69 பிள்ளைகளைப் பெற்றெடுத்தாள். இவற்றிலே 32 பிள்ளைகள் இரட்டைப்பிள்ளைகள். 21 பிள்ளைகள் மூற்றைப்பிள்ளைகள்—அதாவது ஒவ்வோர்பிரசவத்திலும் மூன்றுமூன்றுகப் பிறந்தபிள்ளைகள். 16 பிள்ளைகள் ஒவ்வோர் பிரசவத்திலும் நான்குநான்காகப் பிறந்தபிள்ளைகள்.

✻ இதுவரை ஓர்கிறிக்கெற்பந்தை அதிகதூரத்துக்குஎறிந்து பிரசித்திபெற்றவர் யார்?

திரு. ஆர். பேர்சிவல்என்பவரே. இவர் 1884-ம் ஆண்டு பாஸ்குவாரப் பெரியதிங்களன்று டேறம் சான்ட்ஸ் குதிரைப்பந்தயமைதானத்திலே கிறிக்கெற்பந்துஒன்றை 140பார் 2அடி தூரத்துக்குஎறிந்து பிரசித்திபெற்றார்.

✻ மரியாயின்சேனை உலகில் எத்தனைமேற்றிராசனங்களிலே, எத்தனை பாஷைகளிலேபணியாற்றிவருகின்றது?

800 மேற்றிராசனங்களிலே, 80 பாஷைகளில் மகாவிசேஷப்பட்ட பணியாற்றிவருகிறதென இங்கிலாந்திலே லிவர்ப்பூல்நகர் அதிமேற்றிராணியாரான கொட்பிறிஆண்டவர் தெரிவிக்கின்றார்.

✻ திருச்சபையிலே அர்ச். பட்டஞ்சூடியவர்களாய் எத்தனை பாப்புமார் இருக்கின்றார்கள்?

78 பாப்புமார் இருக்கின்றார்கள். இவர்களிலே சம்பேதுருவானவர் காலமுதல் கொன்ஸ்தந்தீன்சக்கிரவர்த்தி திருச்சபைக்குச் சுயாதீனம்அருளிய 313-ம் ஆண்டுவரையிலுள்ள முதல் 32 பாப்புமாரும் அர்ச்சியசிஷ்டர்கள். இவர்களில் மூன்றுபேர்நீங்கலாக ஏனையோரெல்லாம் வேதசாட்சிகளாவர். 313-ம்ஆண்டுமுதல் 1000ஆண்டுவரையிலே 108 பேர் திருச்சபையை ஆண்டிருக்கிறார்கள். இவர்களிலே இருவேதசாட்சிகள் உட்பட 41 பேர் அர்ச்சியசிட்டர்கள். 1000 ஆண்டுமுதல் இற்றைவரையிலுள்ள பாப்புமார்களில் ஐந்துபேர் அர்ச்சியசிட்டர்கள்.

✻ 1000-ம்ஆண்டுக்குப்பின் அர்ச்சியசிட்டபட்டஞ்சூடிய ஐந்துபாப்புமார்களும் யார்?

அர்ச். சிங்காயர் (1054), அர்ச். ஏழாம்கிறகோரியார் (1078), அர்ச். ஐந்தாவதுசெலஸ்தீன் (1296), அர்ச். ஐந்தாம் பத்திநாதர் (1572), அர்ச். பத்தாம்பத்திநாதர் (1954).

✻ எந்தப்பாப்பானவரின் காலத்திலே மிகப்பெருந்தொகையான அர்ச்சியசிட்டபட்டங்கள் சூட்டப்படலாயின?

நீண்டகாலம் ஆட்சிசெய்த ஒன்பதாம்பத்திநாத பாப்பானவரின் காலத்திலேயாகும். இவர் 52 புதியஅர்ச்சியசிட்டர்களைப் பிரகடனஞ்செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோமையின் கல்லறைச் சுரங்கங்கள்

—: வண. டி. எஸ். ஜார்ஜ்சாமி சுவாமிகள் :—

ரோமையின் பெருமைக்குக் காரணமான அதன் புராதனசெலவங்களுள் கல்லறைச்சுரங்கங்கள் (Catacombs) முதலிடம் வகிக்கின்றன. நித்திய நகருக்குத் திருயாத்திரையாக வருபவர்களும், உல்லாசப்பிரயாணிகளும் அவற்றைக்காணுதல் திரும்புவதில்லை.

நாம் இன்று செய்வதுபோலவே, ஆதிக்கிறீஸ்துவர்களும் யூதமுறையைப் பின்பற்றி மரித்தவிசுவாசிகளை மேரை மரியாதையுடன் அடக்கம்செய்துவந்தனர். அக்கால அஞ்ஞானிகளிடையே யிருந்த கொளுத்தும் பழக்கத்தை அவர்கள் கடைப்பிடிக்கவில்லை. உயிர்நீத்தாரின் உடலை அடக்கம்செய்யினும் சரி, தீக்கிரையாக்கினும்சரி, அச்செயல் நகரெல்லைக்குவெளியே நடைபெறவேண்டுமென்பது அன்றையரோமைப் பேரரசின் சட்டம். அதற்கேற்பக் கிறீஸ்துவர்கள் நகரெல்லைக்குப் புறம்பே தம்முள்செல்வந்தர்களாயிருந்தவர்களின் விசாலமானநிலவெளிகளைக் கல்லறைத்தோட்டங்களாகப் பயன்படுத்திக்கொண்டனர். மரித்தோரை நம்மைப்போல் தரையில் குழிதோண்டிப் புதைத்தனர் அல்லது பெரும்பாலும் தரைக்கடியில் நீண்டபல அடுக்குச் சுரங்கங்கள் வெட்டி, சுரங்கச்சுவர்களில் மாடங்கள்தயாரித்து, அவற்றிலே அடக்கம்செய்தனர்.

ஆரம்பத்தில் இக்கல்லறைச்சுரங்கங்கள் "இளைப்பாறும் இடங்கள்" என்று பொருள்படும் "செமத்திரியா" அல்லது "துயிலுறும் இடங்கள்" என்ற கிரேக்கபெயரால் அழைக்கப்பட்டன. நான்காம் நூற்றாண்டுக்குப்பின் ரோமைநகரின் ஒருகுறிப்பிட்ட இடத்திற்குரித்தான "காத்தக்கோம்பே" என்ற சிறப்புப்பெயர் தவறுகவழக்கத்தில்வந்து, கல்லறைச்சுரங்கங்களைக் குறிக்கும் பொதுப்பெயராக மாறிவிட்டது.

வேதகலாபனைகள் நடந்த முதல் மூன்று நூற்றாண்டுகளில் ரோமையில் மட்டும் மொத்தமாக 50 கல்லறைச் சுரங்கங்கள் இருந்ததாகத் தெரியவருகிறது. தென்புறத்தப்பட்ட கிறீஸ்துவர்கள் இச்சுரங்கங்களிற்றான் பதுங்கியிருந்து, தேவாராதனைசம்பந்தமானகூட்டங்களையும், சடங்குகளையும் நடத்திவந்தனர் என்கின்றார்கள் கத்தோலிக்க ஆராய்ச்சியாளருள் ஒருசாரார். மற்றொருசாரார் அதை மறுக்கின்றனர். அக்காலக் கல்லறைச்சுரங்கங்கள் ஆட்சியாளருக்குப் பட்டவர்த்தனமாகத் தெரிந்தஇடங்கள். எனவே, கிறீஸ்துவர்கள் அவர்களுக்குப்பயந்து, தமை மறைவாக அவற்றில் பதுங்கியிருந்திருக்க முடியாது. ஆகவே, நகருக்குள்ளேயே ஆங்காங்கு வீடுகள்சிலவற்றில் தான் அவர்கள் மறைந்திருந்து மறைச்சடங்குகளை நிறைவேற்றியிருக்கவேண்டும். நவீன ஆராய்ச்சியாளர் ஒருசிலரின் இக்கூற்று நியாயமானதாகத்தான் தோன்றுகின்றது. ஆனால், பரம்பரையாக நாம்கேட்டு அறிந்துவந்த வரலாற்றுக்கு முரணைகச் செல்கின்றது.

இஃது எவ்வாறாயினும், தொன்று தொட்டுக் கிறீஸ்துவர்கள் தங்கள் கல்லறைச்சுரங்கங்களை அடிக்கடி தரிசித்து அங்கு அடக்கம்செய்யப் பட்டிருந்த வேதசாட்சிகளின் அருளிக்கங்களைப் புனிதமாகப் போற்றிவந்தனர் என்பதுமெய். கி. பி. 313-இல் கொன்ஸ்தாந்தீன் சக்கரவர்த்தி பூரணமதச் சுதந்திரம் அளித்தபின் இத்தப்பழக்கம் மேலும் மேலும் வளர்ந்துவந்தது. மிலேச்சர்கள் படையெடுத்து வந்தபோது, சேதம்ஏற்படலாம என்று பயந்துமுதலாவதுசின்னப்பர்என்றபாப்பானவரும், அவருக்குப்பின் வந்தவர்களும், கல்லறைச்சுரங்கங்களிலிருந்த வேதசாட்சிகளின் அருளிக்கங்களை நகரிலுள்ள முக்கிய ஆலயங்களுக்குக் கொண்டுசென்று பத்திரமாகவைத்துப் பாதுகாக்க ஆரம்பித்தனர். அதுமுதற் கொண்டு கல்லறைச்சுரங்கங்களைத் தரிசிக்கும்பழக்கம் நாளடைவில் குறைந்துவரலாயிற்று. பெரும்பாலான சுரங்கங்கள் பாழடைந்தும் விட்டன.

16-ம் நூற்றாண்டிலிருந்து கடைபெற்றுவரும் ஆராய்ச்சியின் பயனாக இச்சுரங்கங்கள்யாவும் புதுப்பிக்கப் பெற்று, அவற்றின் பண்டையசெல்வங்கள் வெளிப்பட்டுள்ளன. இன்று நகரின் பல்வேறுபகுதிகளில் சுமார் 37 சுரங்கங்கள் இருக்கின்றன. 1929-இல் நடந்த "லாத்தெரான்" உடன்படிக்கைப்படி, இச்சுரங்கங்கள் இருக்கும் நிலப்பகுதிகள் யாவற்றையும் திருச்சபையின் உடைமையாக இத்தாலிய அரசாங்கம் பாப்பரசருக்குக் கொடுத்துவிட்டது. அவற்றைப் பாப்பரசரால் நியமிக்கப்பட்டுள்ள ஒருதனிப்பட்ட குழு நிர்வகித்து வருகின்றது. (The Pontifical Commission of sacred Archeology)

மேற்கூறிய37 சுரங்கங்களுள்ளே மிக விசாலமானவையும், பிரபலியமானவையும், திருயாத்திரிகர்கள் பெரிதும்விரும்பித் தரிசிப்பவையும் சிறப்பாக இரண்டு: (1) அர்ச். கல்லீஸ்துவின் கல்லறைச் சுரங்கங்கள், (2) அர்ச். செபஸ்தியாரின் கல்லறைச்சுரங்கங்கள்.

அர்ச். கல்லீஸ்துவின் கல்லறைச் சுரங்கங்கள்

ரோமையில்தோன்றிய முதல்சுரங்கப்பகுதிகள் இவையே. இவற்றை மிகவும்கண்காணித்து, விஸ்தரித்து, ஒழுங்கு செய்தவர் தியாக்கோனும், பிறகுபாப்பாண்டவருமான (கி. பி. 217—222) அர்ச். கல்லீஸ்துஸ். எனவே, அவர்தபெயரே இச்சுரங்கங்களுக்கு இன்றும்வழங்கிவருகின்றது. இன்றைய நிர்வாகமும், கணகாணிப்பும் சலேசிய சபைக் குருமாரின்பொறுப்பில் விடப்பட்டிருக்கின்றன.

இச்சுரங்கப்பகுதிகளைக் கொண்டுள்ளநிலத்தின் மேற்பரப்பு சுமார் 30 அல்லது 40 ஏக்கர் இருக்கும். தரைக்கடியில் ஒன்றின்கீழ்ஒன்றாக ஐந்து அடுக்குகள் அமைந்துள்ளன. மேலடுக்குகள் இரண்டுமட்டுமே திருயாத்திரிகர்களுக்கும், மற்றவர்களுக்கும் காட்டப்படுகின்றன. ஒவ்வொருஅடுக்கிலும் சுமார் 4அடி அகலமுள்ள — இரண்டு ஆட்கள் உயரமுள்ள — வெகுநீண்ட தாழ்வாரங்கள் அல்லதுசந்துகள் குறுக்குநெடுக்காகச் செல்கின்றன. இச்சந்துகளின் இருமருங்கிலும் சிறுசிறுஅறைகள் கட்டப்பட்டுள்ளன. ஒவ்வொருஅறையிலும் உட்புறச்சுவர்களில் படுக்கைவாட்டத்தில் ஓர்உடலை வைப்பதற்குப்போதுமான மாடங்கள் அல்லதுகுழிகள் காணப்படுகின்றன. அவ்வாறே, அறைகளுக்குவெளியே செல்லும் நீண்டதாழ்வாரங்களின் இருபுறச்சுவர்களிலும் மாடங்கள்பலஉள. இம்மாடங்களிற்றான் அக்காலத்தில் மரித்தவிசுவாசிகளை அடக்கஞ் செய்திருக்கின்றனர். சவத்தைத்துணியாற் சுற்றி, அம்மாடங்களில் வைத்து, சலவைக்கல்லால் மூடிவிடுவதுவழக்கம். பலகையின்மேல் மரித்தவிசுவாசியின் பெயரும், வேதவாக்கியங்கள் சிலவும் சமது மறைசம்பந்தமான சின்னங்களும் (உதாரணமாக, யேசுவைக்குறிக்கும் மீன்வடிவம், அப்பம், திராட்சை இரசம், நம்பிக்கையின் சின்னமாகிய நங்கூரம், சமாதானத்தின் அடையாளமான புறா) பொறிக்கப்பட்டுள்ளன. வெளிச்சம்தரவும், இறந்தசகோதரர்களுக்கு மரியாதைசெலுத்தவுமாகச்சுவர்களில் ஆங்காங்கு அகல்விளக்குகள் வைக்கப்பட்டிருந்திருக்கின்றன. பொருள்படைத்தவர்கள் கல்லாலேயே சவப்பெட்டிகள்செய்து, அவற்றில் சவத்தைவைத்து, வாசனைத்திரவியங்களைநிரப்பி அடக்கஞ்செய்திருக்கின்றனர் கடந்த சில நூற்றாண்டுகளாக நடந்துவரும் ஆராய்ச்சியின்பயனாய், மேற்கூறியயாவும் கண்டுபிடிக்கப்பட்டு ஆரம்பத்தில் எந்தெந்தஇடத்தில்இருந்தனவோ, அந்தந்தஇடத்தில் வைக்கப்பட்டுள்ளன. கல்லறைகளை மூடியிருந்த சலவைக்கற்பலகைகள் பெரும்பாலும் உடைபட்டு, துண்டுதுண்டுகளாகத்தான் இருக்கின்றன. மாடங்கள் சிலவற்றில் எலும்புக்குவியல்கள் காணக்கிடக்கின்றன. அவற்றுள் ஒரு துணுக்கைமுதலாய் எவரும் வெளியே எடுத்துவரமுடியாது. எடுத்துவரத் தணிபவர்கள் அதேநேரத்தில்எவரும் தீர்ப்பிடாமலே திருச்சபைக்குப் புறம்பாக்கப் படுவார்கள். (Ipso facto-excommunicated) என்ற அறிக்கை சுரங்கவாயிலில் தொங்கவிடப்பட்டிருக்கின்றது.

சரீரசுகமும் நித்திரையும்

— எம். ராதாபாய் —

உடம்புக்கு உணவு எவ்வளவு அவசியமோ அவ்வளவுஅவசியம் உறக்கமும். இதைஅறிந்து போதியநித்திரை செய்பவர்கள் நல்லஆரோக்கியத்துடனிருப்பதில் வியப்பில்லை. ஆனால், இரவில் ஆழ்ந்தநித்திரை செய்வதற்குப் பகலில் கடினஉடலுழைப்பு இருக்கவேண்டியது அவசியமாகும்.

பொதுவாக வயதுவந்தவர்கள் நாளொன்றுக்கு எட்டுமணிநேரம் நித்திரைசெய்ய வேண்டும். ஆனால், சிலர் ஆறுஅல்லது ஏழுமணிநேர உறக்கத்துடன் திருப்தியடைகின்றார்கள். புதிதாகப்பிறந்தகுழந்தை இருபத்திரண்டு மணிநேரம் தூங்கவேணடும். அப்பொழுதுதான் அதிகோய் வாய்ப்படாமல் நல்லஆரோக்கியத்துடன் வளரும். ஐந்துஅல்லது ஆறு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் தினமும் குறைந்தபட்சம பத்துமணி நேரம் உறங்கவேண்டும். இத்தகைய குழந்தைகளே எப்பொழுதும் முகமலர்ச்சியாகவும், சுறுசுறுப்பாகவும் இருக்கும். ஆனால், நித்திரையின் அளவு அவரவருடைய உடலமைப்பையும், பழக்கவழக்கங்களையும், வேலையின் தன்மையையும் பொறுத்திருக்கிறதென்று வைத்தியநிபுணர்கள் கூறுகின்றார்கள்.

ஆனதெப்படியிருப்பினும், சாதாரணமாக மனிதப்பிறவியெடுத்த எவரும் தேவையான நித்திரையின்றி சீவிக்கமுடியாது. வேலைப்பளுவினாலோ அல்லது பிறகாரணங்களாலோ சிலர்இரவில் போதியநித்திரையின்றி விழித்திருப்பதுண்டு. இவர்களின் உடம்பு நாளுக்குநாள் பலவீனமடைந்து காலக்கிரமத்தில் பலவிதமானநோய்களின் இருப்பிடமாகிவிடும். ஆதலால், எக்காரணத்தை முன்னிட்டும் இரவில் நித்திரையைக் கெடுத்துக் கொண்டு விழித்திருக்கக்கூடாது.

முக்கியமாகப் பெண்கள் நாளுக்கு எட்டுமணிநேரம் உறங்குவது அத்தியாவசியமாகும். அதிலும் குழந்தைகளுக்குப் பாலூட்டும் தாய்மாருக்கு இந்த அளவுநித்திரை அதிகம்அத்தியாவசியமாகும். இரவில் நித்திரைகெட்டால் உடம்பில் இரத்தவோட்டம் செவ்வனேநடைபெறாது. உடம்பின்வளர்ச்சியும், ஆரோக்கியமும் பாதிக்கப்பட்டுச் சருமநோய்கள் தோன்றும். இதையறிந்தும் இரவில் போதியநித்திரையின்றி விழித்திருப்பது வியாதிகளை விலைகொடுத்து வாங்குவதற்கு ஒப்பாகும்.

மக்கள்பொதுவாக நள்ளிரவுக்கு முன்புள்ள ஒருமணிநேரத்திலும் அதிகாலையில் நித்திரையினின்று விழிப்பதற்குமுன்புள்ள ஓரிரண்டுமணி நேரத்திலும்தான் ஆழ்ந்தநித்திரை செய்கிறார்களென்று வைத்தியகலாநிதிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த நேரங்களைச் சிலர் களியாட்ட விழாக்களிலும், கடனங்கழிச்சிகளிலும் கலந்துகொள்வதில் செலவிடுகின்றார்கள். இச்செயல் தேகாரோக்கியத்துக்குப் பெரும்பாதகம் விளைவிக்கக்கூடியதாகும். தற்காலிக மகிழ்ச்சியைக் கருதி இத்தகைய செயலகளில் தொடர்ந்துஈடுபடுவோர் தங்கள்உடம்புக்கு நிரந்தரமானதீங்கைத் தேடிக்கொள்ளுகிறார்கள். தேகசுகத்தைக் கெடுத்துக் கொண்ட இவர்களால் வாழ்க்கை இன்பத்தைக்காண முடியவேமுடியாது.

மற்றும் நாட்களில் வீண்பொழுது போக்கிய சிலமாணவர் மாணவிகள் பாடசாலைப்பரீட்சைகள் நெருங்கும்போது இரவெல்லாம் விழித்திருந்து விடியவிடியப் படிப்பார்கள். இப்படிப் படித்ததெல்லாம் இவர்கள் பரீட்சைமண்டபத்தை யடைந்து கேள்வித்தாளைக் கையிலெடுத்த மாத்திரத்தில் பறந்துவிடும். ஒருபோதும் நினைவுக்கு வராது. இதற்குக் காரணமென்ன? இரவில் நித்திரைசெய்யாது விழித்திருந்ததால், மூளைக்குச் செல்லவேண்டிய புதியஇரத்தம் போதிய அளவு செல்லவில்லை. அதனால்மூளை பகலில் செலவிட்டசக்தி ஈடுசெய்யப்பட வில்லையாகலின் மூளை புதியசுமையை ஏற்கமறுக்கின்றது. இத்தகைய குழந்தைகளின் பெற்றோர்—முக்கியமாகத் தாய்மார்கள் இவர்கள் நித்திரைவிழித்துப் படிப்பதற்கு ஊக்கமளிக்கக்கூடாது. உடம்பிலுள்ள சகலஉறுப்புக்களுக்கும் தேவையான ஓய்வைக் கொடுக்கும் நித்திரையைக் கெடுத்தக்கொள்வது மதியீனமேதவிர வேறன்று.

சிந்தியாமல் வேகமாகப் பேசுவது "பிரேக்" இல்லாமல் வண்டியை வேகமாகச் செலுத்துவது போலத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தைக்கு விருந்தாகும்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றிப் பரிசுத்தசுவிசேஷத்தில் கூறப் பட்டுள்ளது. பதகளிக்கும் பேதை களான அப்போஸ்தலரை நோக்கி அவர் கடலின்மீது நடந்துசென்றார் என்றும் விபரிக்கப்பட் டிருக்கிறது. அர்ச். ஜெரூட்டும் தமதுஆண்டவரைப் போலவே கொந்தளிக்கும் கடலின் மீது நடந்து சென்று நேப்பிள்ஸ் குடாவில் ஆழ்ந்துகொண்டிருந்த தோ ணியை அக்கரைப்படுத்தினார் என்று அவர் சரிதங்கூறுகின்றது.

ஆத்துமத்தின் அந்தரங்கத்தை அறி யும் ஆற்றல்படைத்த அர்ச்சியசிட்டர் களில் அர்ச். ஜெரூட்டும் ஒருவர். அநேகரின் வருங்காலத்தை வெகு விளக்கமாக வெளிப்படுத்தின ஒருசில ரில் இவரும்ஒருவர். இதனால், குற்ற முள்ள நெஞ்சத்தவர் இவர்முன் பு குறுக்கிட அஞ்சினர். ஆயின், கவலை நிறைந்தவர் ஆறுதலைவிரும்பி இவரை நெருங்கினர்.

கல்விப்பயிற்சி மீகக்குறைந்தவராயி னும் கலைக்கியானிபோல் விளக்கங் கொடுத்தார். பரமஇரகசியங்களைத் தெளிவுபட அறிவுறுத்தினார்.

(வளரும்)

மட்டக்களப்பு

தாண்டவன்வெளித் தபால்

பிரிவுஉபசாரம் — மட்டக்களப்பு, தாண்டவன்வெளிக் கிளெனிஆண்பாட சாலையில் கடந்த ஐந்துவருடங்களாக ஆங்கிலஆசிரியையாகக் கடமையாற்றி வந்து ஆசிரியர்மனதையும், மாணவர் மனதையும் ஒருங்கே ஈர்ந்துகொண்ட திருமதி டெய்சி கிறிசோஸ்தம் அவர் கள் ஆசிரியத்தொழிலுக்கு முற்றுப் புள்ளியிட்டு இல்லறவாழ்க்கையில் பிர வேசிப்பதற்காக நம்மைவிட்டுப் பிரிந் துள்ளார். அதனால், இம்மாதம் 11-ந் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 3-30 மணியளவில் பாடசாலைமுகாமைக்காரர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக்சுவாமி யவர்கள்தலைமையிலே அவருக்கு ஓர் பிரிவுஉபசாரவிழா நடந்தேறியது. தங்கமோதிரம்ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது. சொற்பொழிவு களின்பின் பிரிவுபசாரஆசிரியை சொற் பொழிவுநிகழ்த்தினர். தேநீர்விருந் துபசாரத்தின்பின் புகைப்படம் பிடிக் கப்பட்டது.

வயோதிபர் விடுதிகள் — மட்டக் களப்பு, தாண்டவன்வெளியில் சுவமாய் அமைக்கப்படுகின்ற வயோதிபர் விடுதி களுக்கு இம்மாதம் 13-ந்திகதி ஞாயிற் றுக்கிழமை பி. ப. 5 மணிக்கு அத்தி வாரக்கல் நாட்டும்விழா இனிதேநடந் தேறியது. மகாவலி திரிகோணமலை மேற்றிராணியாண்டவர்அவர்கள் பங் குக்குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம் பேக் சுவாமியவர்களால் மாலையிடப் பெற்று, வறியோரின் சிறியசகோதரி களாலும், ஏனையோராலும் அமைக் கப்பட்டிருந்த அலங்காரப்பந்தருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவ் வமயம் வறியோரின் சகோதரிகளுக் கென ஒன்றும், வயோதிபரான ஆண் பெண் பாலாருக்கென இரண்டுமாக மூன்று விடுதிகளுக்கும் ஆண்டவர் அவர்களால் அத்திவாரக்கல் இடப்பட் டது. ஈற்றில் திவ்வியநற்கருணைஆசீர் வாதத்துடன் விழாமுற்றுப்பெற்றது.

— நிருபர்

புத்தக மதிப்புரை

பயிலுந் தமிழ்ப்பயிற்சி

ஐந்தாம் வகுப்பு

ஆக்கியோன்: P. S. ஞானப்பிரகாசம்.
பிரசுரம்: அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்
விலை: ரூபா 1-25.

பாஷைப்பாடம் கற்பித்தலில் புதிய போதனை முறைகள் பலமாறுதல்களை விளைத்துள்ளன. வேம்பென வெறுத் தொதுக்கிய அப்பாடத்தை இன்றுபிள் ளைகள் கரும்பெனவிரும்பிக் கற்கிறார் கள். அத்தோடு இம்முறையிற் கற்பிப் பதால் பிள்ளைகள் திருத்தமாகப்பேச வும், எழுதவும் மிகவும்விரைவில் கற் றுக்கொள்ளுகிறார்கள். பயிற்சிமூலம் பாஷையிற் தேர்ச்சிஅடைதலே இம் முறையின் அடிப்படைவிதிஎன்று கூற லாம்.

பிரதமவகுப்புகளுக்கு இம்முறைப் படி மொழிப்பயிற்சியூட்டுதல் சால ச் சிறந்ததுஎன்பது எல்லார்க்கும் ஒத்த ஒரேமுடிபா யிருந்தபோதிலும் அம் முறையைத்தழுவிப் பிள்ளைகளை வழி நடத்துவதற்கான பயிற்சிப்புத்தகங்கள் அத்தனை நம்தமிழ்மொழியில் எழுதப் படாமலிருப்பதுவருத்தத்திற்குரியதே. ஒருசிலநூல்கள் வெளிவந்துளவேனும் அவை பெரும்பான்மையும் பரீட்சைக ளிற் சித்தியடைவிப்பதற்கான குறுக்கு வழியைக் காட்டுவனவா யமைந்திருக் கின்றனவே யல்லாமல் பிள்ளைகளின் மொழிவளர்ச்சிக்குப் போதுமான உப காரம செய்வனவாயில்லை.

இத்தகையகுறைகள் பலவற்றையும் நீக்கும் நன்னோக்கோடு பிள்ளைகளின் வளமான பாஷைவளர்ச்சிக்கு வழி கோலுமுகமாக இருபத்தைந்தாண்டு கள் இடைவிடாமல் பாஷைப்பாடம் படிப்பித்த அனுபவத்தைத் துணைக் கொண்டு பண்டிதர்அவர்கள் ஐந்தாம் வகுப்பு மாணாக்கர்களுக்குப் "பயிலுந் தமிழ்ப்பயிற்சி" எனப்பெயரிய பயிற் சிப்புத்தகத்தை எழுதித்தந்துள்ளார் கள். எழுத்து, சொல்லாக்கம், சொல், சொற்றொடர், புணர்ச்சி, வாக்கியம், கடிதம், கதை, கட்டுரைஎழுதல், அப்பி யாசங்கள்என்ற பத்துஇயல்களைத் தன் னுளடக்கிய ஐம்பதுபாடங்களையுடைய தாய், ஐந்தாமவகுப்பு அறியவேண்டிய பொருளைகளையெல்லாம் ஒருங்கடக்கிய தாய், நல்லகாகிதத்தில் சிறந்தபதிப்பாகி மலிந்தவிலையில் அமையப்பெற்றது இந் நூல். ஆசிரியருடைய உதவியின்றியே மாணவர் தாமாகவே கவர்ச்சியுடன் செய்யக்கூடிய அநேக தரப்படுத்தப் பட்ட பயிற்சிகளைக் கொண்டிருப்பதே இந்நூலின் தனிப்பெருஞ் சிறப்பாகும். எனவே, இந்நூல் மாணவரது முயற் சியையும், ஆசிரியரது முயற்சியையும் மிகவும் இலகுபடுத்திப் பாஷைப் பாடத்தில் ஆர்வத்தையும், அறிவையும் ஊட்டாநிற்கும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. ஆசிரியரின் இவ்வரும்பணி யை மெச்சுவதோடு, ஏனைய ஆறும், ஏழாம் வகுப்புகளுக்குரிய பயிற்சிநூல் களையும் எதிர்பார்த்திருக்கின்றோம். எமக்கு அனுப்பியபிரதிக்காக நன்றி கூறுகின்றோம்.

நன்றியறிந்த தோத்திரம்

சதாசகாய மாதாவிடம் நான்கேட்ட மன்றாட்டு உடன் கிடைக்கப்பெற்றேன். நேர்த்திப்படி இதனைப் பிரசுரிக்கிறேன்.

யாழ்ப்பாணம் A. J. P.

விதவைக்குச் சகாயதனம்

மருதங்கடவளைத் தபாற்கந்தோரில் போஸ்ற்மாஸ்ரராயிருந்து கடமை யாற்றிவரும்போது சிலமாதங்களின் முன் சதிமானமாகக் கொலைசெய்யப் பட்ட திரு. ரி. தம்பையா அவர்களின் மனைவியாருக்குப் போஸ்ற்மாஸ்ரர்மா ரின் ஐக்கியசங்கம் 1,700 ரூபாபெறு மதியான செக்ஒன்றையும், ஒவ்வொன் றும் 3,500 ரூபாபெறுமதியான இலங் கைச் சேமவங்கிப் பாஸ்புத்தகங்கள் இரண்டையும் சென்ற ஞாயிற்றுக் கிழமை உபகரித்திருக்கிறது. கொலை செய்யப்பட்ட திரு. தம்பையா அவர் களுக்கு இருபிள்ளைகள் உள்ளனர். இந்தக் குழந்தைகளுக்கென்றே சேம வங்கியில் அந்தஏழாயிரம் ரூபாவும் சேமிக்கப்பட்டுள்ளது.

மற்றோர் புதிய இயக்கம்

கொழும்பிலே கிறீன்பாத் வீதியி லுள்ள ஜி. எவ். எஸ். மண்டபத்தில் சென்றசனிக்கிழமை நடைபெற்ற கூட்டமொன்றிலே "இலங்கைத் தேசிய லீக்" எனும் நாமத்துடன் ஓர் புதியசங்கம் ஆக்கப்பட் டிருக்கிறது. அதிலே புதியஇயக்கம்ஒன்று ஆரம்ப மாகியிருக்கிறது. அதாவது, ஆங்கிலத் தை இலங்கையில் அரசகரும மொழி யாகவும், பிரதமபோதனை மொழியாக வும் ஏற்படுத்தச்செய்வதேயாகும். இந் தச்சங்கத்தின் தலைவராகத் திரு. எட் மன்ட்றொட்றிக்கோ அவர்களும், காரிய தரிசியாக டக்ற் கே. பி. பெறெரா அவர்களும், தனாதிகாரியாகச் செல்வி எஸ். டி. பெறேரா அவர்களும் தெரியப் பெற்றிருக்கிறார்கள்.

● தனது ஆபரண ஏற்றுமதியை விருத்திசெய்தற்கென்று கம்யூனிஸ்த செக்கோசிலவக்கியாநாட்டு அரசாங்கஞ் செய்திருக்குந் திட்டத்தின் ஓர்பகுதி யாகச் செபமாலைகளையும் செய்வதற் குத் தொடங்கப்போகிறதென்று "லி டோவ் டெமொக்கிறூலியே" என்னும் கம்யூனிஸ்தபத்திரிகையின் சமீபகால இதழ்ஒன்றில் செய்திவெளியாயிருக் கிறது.

● ரூண்ட மைக்னலிகம்பெனி தன தது ஆற்லஸின் நூற்றாண்டு நூற்பதிப்பி லே, உலகின் குடிசனத்தொகை சென் ற ஆடிமாதம் 1-ந்திகதியன்று 262 கோடி பேரென மதிப்பிட்டிருக்கின் றது. இந்தத்தொகை 1950-ம் ஆண் டிலும்பார்க்க 12கோடி பேராலும், 1939-ம் ஆண்டிலிருந்து 38 கோடி பேராலும் அதிகரித்திருப்பதாகக் கம் பெனிஅதிகாரிகள் கூறுகின்றார்கள்.

● சீனாவிலிருந்து சென்றவியாழக் கிழமை விடுதலைசெய்து வெளியேற்றப் பட்ட இருஅமெரிக்க கத்தோலிக்க குருமார் ஹொங்கோங் தீவுவந்து சேர்ந்திருப்பதாய் அங்கிருந்து தந்திச் சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. "குற்றவாளிகள்" என்றுகூறிக் கம்யூ னிஸ்தசீனாவில் சிறைவைக்கப்பட்டிருந் த இவ்விருகுருமாரும் தாங்கள்குற்ற வாளிகளென்று ஒப்புக்கொள்ளாவிடின் தங்களைக் கொன்று போடுவதாகவும், சித்திரவதை செய்வதாகவும் சீன ச் சிறைஅதிகாரிகள் பயமுறுத்தியதாக இவர்கள்கூறினார்களாம்.

GOVT. NOTICE

Forest Dept.

N3314—3 Ranai and 11 Satin logs will be sold by Public Auction at the Point-Pedro Timber Depot by D.F.O., N. D., Jaffna, on 6-12-55 commencing at 9 a. m. Intending purchasers are requested to acquaint themselves with the special conditions governing the sale which are available with the Depot Keeper. They may also inspect the timber by arrangement made with the Depot Keeper, Point-Pedro.

நல்லூர் மீசாம்

திருநெல்வேலி அர்ச். பிரான்சீஸ் சவேரியார் திருநாள்

நோவேனாக்கள் இம்மாதம் 25-ந் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி, மார்கழி மாதம் 3-ந் திகதி சனிக்கிழமை காலை பாடற்பூசையோடும், திருச்சுரூப சுற்றுப் பிரகாரத்தோடும் முடிவாகும்.

ஆராதனை: 25-ந் திகதிமுதல் 30-ந் திகதிவரை மாலை 5 மணிக்குச் செபமாலை தொடங்கும். மார்கழி 1-ம், 2-ம் திகதி களில் மாலை 7-30 மணிக்குச் செபமாலை தொடங்கும்.

திருநாளன்றுகாலை 5-30 மணிக்கு முதற்பூசை. 7 மணிக்குப் பாடற்பூசை.

J. A. Francis, O. M. I.
St. Francis Xavier's Church,
NALLUR.

நன்மரண அறிக்கை

பிறப்பு:— 28-9-1900.
இறப்பு:— 16-10-1955

எனது நேசபத்தாவும், எங்கள் அரு மைத் தந்தையுமான ஜோன் வென்சஸ் லாஸ் கோஸ்தா அவர்கள் தமது நடப்பு வியாதியால் பீடிக்கப்பட்டு எவ்விதசிகிச் சைக்கும் குணப்படாமல் கடைசித்தேவ திரவிய அனுமானங்களைச் சரிவரப்பெற்று நாளது 16-10-1955 ஞாயிற்றுக்கிழமை 2 மணியளவில் தமது 56-வது வயதில் பரமபதமடைந்த பரிதாப செய்தியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இதனைக் கண்ணுறும் சகலரையும் இவ் வாத்தும இளைப்பாற்றிக்காக இறைவனி டம் இரந்து மன்றாடும்படி வேண்டிக் கொள்ளுகிறோம்.

பத்தாவை இழந்து பரிதபிக்கும் மனைவி,
மேரிரோஸ் கோஸ்தா.

தந்தையை இழந்து பரிதபிக்கும் மக்கள்,
ரீட்டா ஞானம் கோஸ்தா.
லியோ போல்ட் கோஸ்தா.
பொன்ரோஸ் கோஸ்தா.

● ஜப்பானிலே இதற்குமுன் கண் டறியாதஅளவிலே இம்முறை மிகப் பெருந்தொகையானநெல் விளைந்திருப் பதாய் அறிவிக்கப்படுகிறது. அங்கே இவ்வருடம் விளைந்துள்ளநெல் 7 கோ டியே 66லட்சத்து 48ஆயிரம் கொக் கு. ஒருகொக்கு எனும் அளவானது ஐந்துபுசலுக்குச் சமமாகும். ஜப்பா னில் பெருந்தொகையானநெல் விளைந் தபோதிலும் பிறநாடுகளிலிருந்து அது தற்போதும் அரிசிஇறக்குமதி செய்து கொண்டே வருகிறது.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, November 24-1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org